அத்தியாயம்- 3

1.அறியாமை என்னும் ஆத்மாவின் தூக்கம் நான்கு வகையான பேச்சுக்களால் அடழிக்ிறது ,இருப்பினும் நான்கு வகையான பேச்சுக்களின் கடன் தீராது, ஏனென்றால் ஆத்மாவின் விழிப்பும் ஒருவகை உறக்கமே.

குறிப்பு-நான்கு வகையான பேச்சுக்கள்:1.பரா 2. பார்ஷயந்தி 3. மத்தியமா 4.வைகரி.

2.இந்த நான்கு வகையான பேச்சுக்களும் ஞான விடுதலைக்கு உதவி செய்கின்றன .அஞ்ஞானம் அழியும் போது கூடவே இந்த நான்கு வகையான பேச்சுக்களும் அழிகின்றன.

3. உடலோடு கை,கால் வருகிறது. மனதோடு புலன்கள் வருகிறது .சூரியனோடு சூரிய ஒளி மறைகிறது.

4.தூக்கம் அழியும் போது கனவும் சேர்ந்தே அழிகிறது ,அதே போல அறியாமை விலகும் போது நான்கு வகையான பேச்சுக்களும் அழிகிறது.

5. கட்டை நெருப்பாக மாறுவது போல் ,இரும்பு உருகிய பிறகு திரவ வடிவில் வாழ்கிறது.

6.உப்புக் கட்டி நீரில் கரைந்த பின்பு தண்ணீரில் உப்புத்தன்மை இருக்கிறது .கனவு கலைந்த பின்பும் விழிப்பு நிலையில் அதன் நினைவாக இருக்கிறது.

7.இவ்வாறு அறியாமை விலகிய பின் நான்கு வகையான பேச்சுக்களும் மறைந்தது ,ஆனால் அது ஞானமாக வெளிப்படும்.

8.ஞானம் என்னும் விளக்கு எரிவதற்காக இந்த நான்கும் தன் வாழ்க்கையை தியாகம் செய்கிறது ,ஆனால் ஞான தன்மையுடன் வாழும்.

9. தூக்கம் கனவிற்கு துணை புரிகிறது ,தூக்கம் கலைந்த உடன் விழிப்பு உணரப்படுகிறது ,இந்த விழிப்பு நிலைக்கு தூக்கமே துணைபுரிகிறது.

10. அறியாமை இருக்கும் போது தவறான அறிவு இருக்கும் .அறியாமை விலகும் போது சரியான அறிவு ஒளிரும்.

11. அறியாமை இருந்தாலும், இறந்தாலும் சிக்கல் தான் ,அறியாமை இருந்தால் பற்று என்று சிக்கல் .அறியாமல் இறந்தால் விடுதலை (பொய் சுதந்திரம்) என்று சிக்கல்.

12.விடுதலையும் ஒருவகை பற்றுதான் ,பின் ஏன் சுதந்திரம் என்ற வார்த்தை கொடுக்கவேண்டும் ?அறியாமை விலகும் போது பற்று ,விடுதலை என்கின்ற வார்த்தை அர்த்தமற்றதாகிறது.

13.பூச்சாண்டியின் மரணம் குழந்தைக்கு சந்தோஷத்தை அளிக்கின்றது, ஆனால் மற்றவர்களுக்கு பூச்சாண்டி என்ற ஒன்று இல்லவே இல்லை, ஆதலால் எப்படி பூச்சாண்டி இறந்ததை ஒப்புக்கொள்வார்கள்.

14. இல்லாத பானை உடைந்து விட்டது என்று வருத்தப்பட்டால் அவன் அறிவாளியா?

15. ஆதலால் பற்று என்பதே உண்மை இல்லாதது என்றால் விடுதலை என்பது மட்டும் எப்படி உண்மையாகும் .அறியாமையின் சாவே விடுதலை என்பது ஏற்றுக் கொள்ள முடியாதது.

16.சதாசிவம் தன் சிவ சூத்திரம் என்ற நூலில் ஞானம் என்பதே பற்றூ என்று குறிப்பிட்டிருக்கிறார்.

17.இதையே வைகுண்ட நாதனான விஷ்ணு சாத்வீகம் என்ற பெயரில் ஞானமே பற்றாகிறது என்று கூறுகிறார்.

18.சிவனும், விஷ்ணுவும் சொல்லிவிட்டார்கள் என்பதற்காக நான் சொல்லவில்லை,அவர்கள் சொல்லாவிட்டாலும் இதுதானே உண்மை.

19.சுயமே (பிரம்மமே) சுத்த அறிவாக இருக்கிறது ,அதை அறிவதற்கு வேறொரு அறிவு தேவையா? சூரியன் ஒளிர்வதற்கு மற்றொரு வெளிச்சம் தேவையா?

20.சுத்த அறிவாய் இருக்கும் சுயத்தை அறிவதற்கு இன்னொரு அறிவு தேவைப்படும் என்றால் சுயம் அழிவில்லாதது என்றல்லவா ஆகிவிடுகிறது. ஒரு விளக்கை அறிவதற்கு வேறொரு விளக்கு தேவைப்படுமே ஆனால் அந்த விளக்கு ஒளிரவில்லை என்று அர்த்தமாகிறது.

21. தான் தனக்குள்ளே இருப்பதை அறியாமல் தன்னைத் தேடி நாடு நாடாக அலைவது சாத்தியமா?

விளக்கம் :இன்பத்தைத் தேடி வெளியே சென்றேன் கடைசியில் அறிந்தேன், இன்பமே நான் என்று.

22.ஒருவன் பல நாட்கள் தன்னைத் தேடி கண்டறிந்த பிறகு இத்தனை நாட்கள் தன்னை வெளியில் தேடி அலைந்ததை நினைத்து ஆனந்த படுவது என்பது சாத்தியமா?

23.இதேபோல் சுத்த அறிவாக இருக்கின்ற அது "நான் பிரம்மம்" என்ற இன்னொரு அறிவைக்கொண்டு அறிய நினைப்பது பந்தமே.

24.எந்த அறிவானது அந்த அறிவாகவே உன்னை மாற்றி விடுகிறதோ, அதைத் தவிர மற்ற அறிவுகள் கொண்டாடத்தக்கவை அல்ல.அறிவு விடுதலையை கொடுக்கும் எப்பொழுது என்றால் ,இந்த விடுதலையோடு அறிவும் கரைந்து விடும் பட்சத்தில்.

25.ஒருவன் தன் அகங்காரத்தை விட்ட உடனேயே நான்கு வகையான கோசத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கும் நான்கு வகையான வாக்குகள் மற்றும் அஞ்ஞானம் எரிந்து விடுகிறது.

26.அஞ்ஞானம் என்னும் மரக்கட்டையை ஞானம் என்ற அக்னியால் எறியூட்டினால், மிஞ்சும் சாம்பலே உண்மையான அறிவாகும்.

விளக்கம் : அஞ்ஞானமாகிய மாயையை விளக்கினால் மிஞ்சுவது எதுவோ அதை ஞானம் என்று சொல்ல வருகிறார்.

27.தண்ணீரில் விழுந்த கற்பூரமானது முற்றிலும் தண்ணீராக மாறிய பிறகும் கூட அது நறுமணமாக இருந்து கொண்டுதான் இருக்கிறது.

28.சாம்பலை உடலில் பூசிய பிறகு சாம்பல் தூள் கீழே விழுந்துவிடும், ஆனாலும் சாம்பல் நிறம் உடலில் மிகுந்திருக்கும்.

29. நீராவியில் நீரை காணமுடியாது என்றாலும் அது ஈரப்பதமாக இருந்துகொண்டுதான் இருக்கிறது.

30.மத்தியான உச்சி வெயிலில் மனிதனின் நிழலானது கண்களுக்கு தெரியாத போதும் ,அது அவன் காலடியில் இருந்து கொண்டு தான் இருக்கிறது.

31.இதேபோல் சுத்த அறிவானது மற்ற எல்லாவற்றையும் இல்லாமல் செய்துவிட்டு ,இது இயற்கையாக உண்மையான நிலையில் இருந்து கொண்டிருக்கிறது.

32.நான்கு வகையான வாக்குகளின் கடனை எதனாலும் நீக்க முடியாத போது எனது குருவின் பாதத்தை பணிந்து மீட்டுக் கொடுப்பேன்.

33. ஆதலால் பரா பார்ஷ்யந்தி, மத்தியமா மற்றும் வைஹரி ஆகியவற்றின் கடன்களை தீர்க்காமல் ஒருவன் எவ்வளவு தான் பற்று இருந்தாலும் அவன் அறியாமையில் இருப்பவனே.

## அத்தியாயம் 4:அறிவுக்கும் அறியாமைக்கும் உள்ள வேறுபாடு

1.விழித்தவுடன் எப்படித் தூக்கம் விலகிப் போகிறதோ ,அறிவு வந்தவுடன் அறியாமை மறைந்து போகிறது.

2. ஒருவன் தன் முகத்தை கண்ணாடியில் பிரிதிம்பித்து காணும்போது கூட அவன் ஒரே முகத்தை உணர்கிறான்.

3.அறிவானது ஆத்மாவையும் பிரபஞ்சத்தையும் இணைக்கிறது ,இது எப்படி என்றால் கத்தி தன்னையே வெட்டிக் கொள்வது போல.

4.பட்டுப்பூச்சி தனக்குத்தானே வலையைப் பின்னி அதில் சிக்கி தானே அழிகிறது அல்லது ஒரு திருடன் ஒரு பெரிய சாக்கு மூட்டையை திருடும்போது அவனாகவே தன்னை காட்டிக் கொடுத்து அகப்பட்டுக் கொள்கிறான்.

5.நெருப்பு கற்பூரத்தை எரித்து விட்டு தானும் அழிந்து விடுகின்றது ,அதுபோல அறிவானது அறியாமையை அழித்து விட்டு தானும் அழிந்து விடுகின்றது.

6. பரந்து விரிந்த அறிவானது அறியாமையின் துணை இல்லாததால் அக்கணமே அழிந்துவிடுகிறது.

7. விளக்கு அணையும் போது திரியில் உள்ள சுடர் அதிக பிரகாசத்தை கொடுப்பது என்பது அனைவதற்கான அறிகுறியே.

8.(பெண்ணின்) மார்பகங்கள் வளர்வது ,தளர்வதும் யாருக்குத்தெரியும் அல்லது மல்லிகை பூ மலர்வதும், உலர்வதும் யாருக்குத் தெரியும்.

9. (நீரில் அலைகள் உருவாகுவதே அது இல்லாமல் போவதற்குதான், மின்னல் ஒளிர்வதே அணைவதற்குதான்.

10. இப்படியே அறிவானது அறியாமையை ஒரே மடக்காக குடித்து ,வயிறு பெருத்து விளைவாக அழிந்துவிடுகிறது.

11. பிரளயகாலத்தில் உலகம் அழியும்போது நிலம் ,நீர் என்ற எல்லைக் கோடே இல்லாமல் மூடிவிடுகிறது.

12.சூரியனின் உருண்டை வடிவம் இவ்வுலகத்தை விட அதிகமானால் இருட்டும் ,வெளிச்சமும் ஒன்றாகிவிடும்.

13. முழுவதும் விழித்த நிலையில் அரைகுறை விழிப்பும் ,தூக்கமும் அழிந்துவிடுகிறது.

14.இப்படியே அறியாமையை அழித்து விட்டு ,அறிவானது விரிவடைந்து அறிவு அறியாமையை விழுங்கிவிட்டு சுத்த அறிவாக மிளிர்ுகிறது.

15.அந்த நேரத்தில் (அறிவு சுத்த அறிவாக மிளிரும்போது )அந்த அறிவு எப்படி மிளிருகிறது என்றால் சந்திர கிரகணத்தில் சூரியன் மறைக்கப்பட்டு ஒளிராமல் ஒளிர்வது போல.

16.சூரிய ஒளியை மங்க செய்வதற்கு அதை விட மிஞ்சிய ஒளி கிடையாது, அது போல் சூரிய ஒளியை மங்க செய்வதற்கு எந்த இருட்டும் கிடையாது .இதை அவனுக்கு ஒப்பிடலாம்.

17.சுத்த அறிவான இதை ,வேறு அறிவைக்கொண்டு ஏற்ற முடியாது போலும் அறியாமையினால் அதனை மலுங்கடிக்க முடியாது.

18.கருவிழியானது தன்னையே காண முடியாதது போல், சுத்த அறிவானது தன்னை அறிவு என்று உணராது.

19. ஆகாயம் ஆகாயத்திற்கும் அடங்குமா ? நெருப்பை நெருப்பு கொளுத்துமா? தன் தலை மேல் தான் நிற்க முடியுமா?

20. பார்வை தன்னை பார்க்குமா? சுவை தன் சுவையையறியுமா ?சத்தம் தன் சத்தத்தை கேட்குமா?

21.விளக்கை போல் சூரியனை ஏற்ற முடியுமா? பழம் பழத்தை கொடுக்குமா? நறுமணம் தன் மனத்தை அழியுமா?

22.இப்படியே அறிவு தன்னை அறியாது ஆதலால் சுத்த அறிவு தான் அறிவு என்று அறியாமல் அறிவாக இருக்கிறது.

23.எங்காவது அறிவு தன்னை அறிவு என்று உணருமானால் ,அறியாமையே இங்கு அறிவாக இருக்கிறது.

24. இருளை அறியாத ஒளி தன் ஒளியை எப்படி அறிய முடியும்?

25. இப்படி இருக்கிறது, அப்படி இருக்கிறது என்று கூற முடியாததை கூறினால் (இப்படி ,அப்படி) அது வீண் வார்த்தை.

26. ஏதும் அற்ற நிலை உண்மை நிலையாக இருக்குமேயானால் அந்நிலையை அறிவது யார்?

27.ஏதும் இல்லாத நிலை இருக்கிறது என்று கூறுவதற்கு யார் அதிகாரம் கொடுத்தார்கள் .இறைவனை அப்படி அழைப்பது அறியாமையே.

28.விளக்கு அணைந்த பிறகு அனைத்தவனும் இல்லாமல் போகுமானால் ,வெளிச்சம் இல்லாது இருந்ததை யார் அறிவார்?

29.ஒருவன் உறங்கிக் கொண்டு இருக்கும்போது மரணமடைந்தால் அவன் ஆழ்ந்து உறங்கியதை யார் அறிவார்?

30.பானை இருந்தால் இருக்கிறது என்று கூறலாம், உடைந்து இருந்தால் இல்லை என்று கூறலாம் ,பானையே இல்லாதபோது இருக்கிறதே, இல்லை என்று எவர் பேசுவார்?

31.எனவே சுத்த அறிவை இருக்கிறது என்றோ, இல்லை என்றோ கூறமுடியாது இருக்கிறது. இல்லை என்று சொல்ல முடியாததாக சுத்த அறிவு இருக்கிறது.

32.எந்த காரியமும் இல்லாமல் சுத்த அறிவு காரணமாக இருக்கிறது ,ஆதலால் இருக்கிறது இல்லை என்று சொல்ல முடியாததாக இருக்கிறது.

33.ஒருவன் தனியாக காட்டில் உறங்கிக் கொண்டு இருக்கிறான், அவன் உறங்குவதை எவரும் பார்க்கவில்லை, அவன் உறங்கியதை அவனும் மறந்து விட்டான்.

34.ஆனாலும் அவன் உயிருடன் தான் இருக்கின்றான். இறைவன் சந்தேகத்திற்கு இடமில்லாமல் இப்படி இருக்கிறார்.

35. பார்வை வேறு பக்கம் திரும்பினாலும் ,பார்ப்பது நின்று போனாலும் கண்கள் குருடாவதில்லை.

36.கருப்பு நிறத்துடன் இருட்டில் இருப்பவன், மற்றவர்களும் பார்க்க முடியாது ,அவனாலும் தன்னை பார்க்க முடியாது, ஆனாலும் அவன் இருக்கிறேன் என்ற உணர்வுடன் இருக்கிறான்.

37.இதேபோல் இறைவன் இருப்பதை அறிந்து கொள்ளவும் முடியாது, நிரூபிக்கவும் முடியாது ,ஆனாலும் இருந்து கொண்டுதான் இருக்கிறார்.

38.ஆகாயம் சுத்தமாக இருப்பதனாலேயே ஆகாயம் இல்லாமல் இருக்கிறது ,ஆனால் அதிலிருந்து தான் உலகம் வெளிப்படுகிறது.

39. தண்ணீர் சுத்தமாக இருந்தால் ,குட்டையும் குட்டைக்குள் இருப்பவையும் தெளிவாக தெரியும்.

40.இப்படியே நம்முடைய சொரூபம் இருக்கிறது. இருக்கிறது, இல்லை என்று வார்த்தைகளால் சொல்ல முடியாததாக இருக்கிறது.

41. விழிப்பு நிலையில் உறக்கம் உணரப்படுவதில்லை மேலும் விழிப்பும் உணரப்படுவதில்லை.

42. பானை தரையில் வைத்தால் அது இருக்கிறது எனலாம் ,பானையை அகற்றிவிட்டால் பானை இல்லை என்று அர்த்தமா?

43.இதேபோல் பானை இருக்கிறது, இல்லை என்று இவை இரண்டுமே பானை இருந்த இடத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தப் போவதில்லை. அதேபோல் சுத்த அறிவில் இருப்பு, இன்மையினால் எந்த பாதிப்பும் ஏற்படப்போவதில்லை.

## அத்தியாயம் 5.

1.இறைவன் (சத் ,சித் ,ஆனந்தம் )அதாவது உண்மையான இருப்பு ,உணர்வு ,ஆனந்தம் .இவையெல்லாம் விஷத்திற்கு விஷத்தன்மை தெரியாமல் இருப்பது போல் இறைவனுக்கு இவையெல்லாம் இருக்காது.

2.பலபலப்பு, கடினத்தன்மை ,மஞ்சள் நிறம் ,இவைகள் ஒன்று சேர்ந்தது தான் தங்கம். திரவத்தன்மை ,இனிப்புத் தன்மை ,மென்மை ,இவை கலந்தது தான் பால்.

3. வெண்மை, மென்மை ,நறுமணம், இவைகள் வெவ்வொரு தன்மையல்ல கற்பூரத்தின் ஒரே தன்மை.

4.கற்பூரம் வெள்ளை தன்மையானது ,வெள்ளை தன்மையே இயற்கையாக பிரகாசமாகிறது .இந்த இரண்டையும் கழித்துவிட்டு பார்த்தால் நறுமணமே மிஞ்சுகிறது.

5.இப்படியே இந்த மூன்று தன்மைகளும் கலந்தே இருக்கும், இப்படியே உண்மை, உணர்வு,ஆனந்தம் என்ற மூன்றும் கலந்து இருக்கும்.

6.உண்மை ,உணர்வு ,ஆனந்தம் என்ற வார்த்தைகள் வெவ்வேறாக இருந்தாலும் ஆனந்தம் என்ற ஒரே வார்த்தையில் இந்த மூன்றும் அடங்கி விடுகிறது.

7.உண்மையே உணர்வு ,

உணர்வே ஆனந்தம்,

ஆனந்தமே உண்மை ,

மூன்றையும் ஒன்றிலிருந்து பிடிக்கமுடியாது அமிர்தத்திலிருந்து இனிப்பை பிடிக்க முடியாதது போல.

8.ஒவ்வொரு நாளும் நிலவு வளர்ந்து பதினாறாவது நாள் முழு நிலவு அடைகிறது ஆனால் நிலவு எப்பொழுதும் முழுமையாக இருக்கிறது.

9. மழை நீர் துளி துளியாக விழும்போது துளிகளை கணக்கிடலாம் ஆனால் தரையில் விழுந்த பிறகு ஒரே தண்ணீராகிவிடுகிறது.

10.பொய்யானவற்றை அகற்றினால் மிஞ்சுவது உண்மையை,ஜடத்தன்மையை அகற்றினால் மிஞ்சுவது உணர்வு என்று வேதங்கள் கூறுகின்றன.

11. துன்பங்கள் முற்றிலும் அழிந்து விட்டால் மிஞ்சுவது மகிழ்ச்சியே என்று இறைவனின் மூச்சான வேதங்கள் கூறுகின்றன.

12.சத், சித், ஆனந்தத்தின் எதிரியான பொய் ,ஜடம் ,துக்கம் இவைகள் அழிந்து அதற்கு வலுவேற்றுகிறது.

13.சத், சித் ,ஆனந்தம் என்பது இறைவனை குறிப்பதற்காக சொல்லப்பட்டது அல்ல .பொய் ,ஜடம் ,துக்கம் களைவதற்காக சொல்லப்பட்டதே.

14.சூரிய ஒளியினால் ஜொலித்துக் கொண்டு இருக்கிறது இந்த ஜட உலகம் .இந்த ஜட உலகத்தால் சூரியனை ஜொலிக்க வைக்க முடியுமா?

15.இறைவனிடம் இருந்து தோன்றிய அறிவாகிய வார்த்தைகளினால் எப்படி இறைவனையே வர்ணிக்க முடியும்?

16.தன்னில் தானாக ஒளிர்வதை செய்முறை விளக்கத்த ாலோ, நிரூபிக்கவ ோ,வார்த்தைகளால் ஆராயவோ முடியாது.

17.தத்துவத்தைவிட்டு தனியாக ஒன்று இருந்தால்தான் தத்துவத்தை நிரூபிக்க முடியும். அனைத்தும் தத்துவமேயானதால் தத்துவத்தை தத்துவம் எப்படி நிரூபிக்க முடியும்?

18.இறைவனை அறிவதற்காக அறிய முயற்சிப்பவனே இறைவன ாகிறான், பின்அறிபவன் என்றும் அறிவு என்பதும் எப்படி இருக்க முடியும்?

19.ஆதலால் சத் ,சித் ,ஆனந்தம் என்பது இறைவனை குறிப்பதற்காக சொல்லப்பட்ட சரியான வார்த்தைகள் அல்ல ,இதை பற்றிய சிந்தனைக்கு இதுவே முடிவு.

20. சத் ,சித் ,ஆனந்தம் என்ற மூன்று வார்த்தைகள் இறைவனை காணும் வரை உபயோகத்தில் இருக்கிறது.

21.மழை பெய்தவுடன் மேகம் மறைகிறது, கடலில் சங்கமித்த உடன் நதி மறைகிறது,சேருமிடம் வந்தவுடன் பாதை மறைகிறது.

22.பழத்தை கொடுத்தவுடன் பூ மறைகிறது ,பழம் சாரு கொடுத்தவுடன் பழம் மறைகிறது, பசி அடங்கியவுடன் சாரு மறைகிறது.

23.ஹோமத்தில் ஆகுதி செய்தவுடன் கைகள் மறைகின்றன ,பாடலை கேட்பவனுக்கு ஆனந்தத்தை கொடுத்துவிட்டு பாடல் ஓய்கிறது.

24.கண்ணாடியில் நம் பிம்பத்தைப் பார்த்த பிறகு கண்ணாடி மறைகிறது, தூங்கி எழுந்த பிறகு தூங்கியவன் மறைகிறான்.

25. இதேபோன்று இறைவனை பார்த்த பிறகு சத், சித்,ஆனந்தத்தின் பொருள் மறைந்து மௌனமாகிறது.

26.நாம் எதை சொன்னாலும் இறைவனை குறிக்காது ,அப்படி அது இறைவனை குறித்து விட்டால் அது இறைவனாக இருக்க முடியாது .

எடுத்துக்காட்டு :ஒருவனது நிழலை அளந்து விட்டு அவனது உயரத்தை அளவிட முடியாது.

27. தன் உண்மையான உயரத்தை கணக்கிட்ட பிறகு தனது நிழலை கணக்கிட்ட செயலை நினைத்து வெட்கப்படுகிறான்.

28.இதே போல இறைவன் என்ற உண்மை ஒரு ஒப்பிட்டு சொல் அல்ல, பின் எதற்காக உண்மை ,பொய் என்று சொல்ல வேண்டும்.

29.ஜடத்தன்மை அழிந்த பின் இருப்பது பரிசுத்த உணர்வு ,இந்த சுத்த உணர்வானது சுத்த உணர்விலே எப்படி இருக்கும்?

30. முழுமையான விழிப்பு நிலையில் ,தூக்க உணர்வும் இல்லை ,விழித்த உணர்வும் இல்லை ,அது போல உள்ளது தான் சுத்த உணர்வின் நிலை.

31. ஆனந்தத்தில் துளியும் துக்கம் இல்லை, பின் ஆனந்தம் என்ற வார்த்தை அர்த்தமற்றதாகி விட்டது.

32. ஆதலால் அசத் ஒன்று இல்லாததால் சத் ஒன்று இல்லாதது ஆகிறது, அசுகம் என்று ஒன்று இல்லாததால் ,சுகம் என்று ஒன்று இல்லாதது ஆகிறது, பின் மிகுந்தது இருப்பது ஆத்மா மட்டுமே.

33. இரட்டைகளை நீக்கினால் கிடைப்பது ஆனந்தம் மட்டுமே.

34.ஆனந்தத்தை அளக்க முயற்சித்தால், அளப்பவன் என்று இன்னொன்று உருவாகிறது, ஆதலால் ஒன்று என்ற ஆனந்தம் மறைகிறது.

35.இதே போல் ஒருவன் ஆனந்தத்தை விட்டு வெளியே வர முடியும் என்றால் அவன் அந்த ஆனந்தத்தை அனுபவிக்கிறான், ஆனால் ஆத்மன் ஆனந்தமாக இருப்பதால் யார் அந்த ஆனந்தத்தை அனுபவிக்க முடியும்?

36. முரசு அடித்தவுடன் தேவதை பக்தனின் உடலில் இறங்குகிறது, அங்கே முரசு மட்டுமே இருக்குமேயானால் யார் யாருக்குள் இறங்குவது?

37.இதேபோல் ஆனந்தமயமாகவே இருப்பது ஆனந்தத்தை அனுபவிப்பது தெரியாது ,அதற்காக அதற்கு ஆனந்தம் என்றாலே என்னவென்று தெரியாது என்பதல்ல.

38.ஒருவன் கண்ணாடியில் பார்க்காத போது அவன் முகம் தெரியாது ஆனால் முகம் இருக்கும், இதேபோல உலகியல் சுக துக்கத்தை அனுபவிக்காத போதும் ஆனந்தமாக இருக்கிறது.

39.கனவில் தோன்றிய விஷயங்கள் விழித்தவுடன் நிராகரிப்பது போல் ஆத்மாவை வெளிப்படுத்தும் கோட்பாடுகளை நிராகரிக்க வேண்டும். ஆத்மா எப்போதும் அதன் இடத்திலேயே மறைந்து இருக்கிறது.

40.கரும்பு விளைச்சலுக்கு முன்னால் அதன் சாறு மறைந்து இருந்தது ,அதனுடைய இனிப்பு தன்மையை அது மட்டுமே அறியும்.

41.வீணையை வாசிப்பதற்கு முன்னால் அதன் சப்தம் கேட்காமல் இருந்தது, அந்த சப்தம் மட்டுமே சப்தத்தை அறியும்.

42. பூவே தேன் ஆகின்றது ,பின் அந்த பூவே வண்டாகி அந்த தேனை ருசிக்கின்றது.

43. சமைக்காத உணவின் சுவையை சமைக்காத உணவை தவிர வேறு எவரும் அறிய முடியாது.

44.இதுபோலவே ஆனந்தமே ஆனந்தத்தை அனுபவிக்க வெட்கப்படும்போது வேறு எவர் ஆனந்தத்தை அனுபவிக்க முடியும்.

45. பகலில் சந்திரனைத் தவிர சந்திரனை வேறு யாரும் அனுபவிக்க முடியாது.

46. உருவம் இல்லாமலேயே அழகு , உடல் இல்லாமலேயே இளமை,. செயல்கள் இல்லாமலேயே நற்செயல்கள்.

47.மனதில் காமம் உண்டாகாத வரைக்கும் எப்படி மன்மதன் காமத்தில் ஈர்ப்பு அடைவான். மனதில் உணர்ச்சிவசம் அடைந்து விட்டால் அவனுடைய இருப்பை அவன் அறிவது மிக கடினம்.

48.இசைக்கருவிகள் கண்டுபிடிப்பதற்கு முன்னால் இசையை இசை மட்டுமே அனுபவித்துக் கொண்டு இருக்கும்.

49.கட்டையில் நெருப்பு பற்றிய பிறகு கட்டைகள் அழிகின்றது ஆனால் நெருப்பு எப்போதும் இருந்துகொண்டுதான் இருக்கிறது.

50.கண்ணாடியின் துணையின்றி தன் முகத்தை ஒருவனால் அனுபவிக்க முடிந்தால் அவனால் மட்டுமே ஆத்மாவின் ரகசியத்தை உணர முடியும்.

51.விதைக்காமலேயே தானியங்களை அறுவடை செய்து ஏற்கனவே அது தானியக் கிடங்கில் இருப்பதாக உணர முடிந்தால் (ஆத்மாவை உணரலாம்).

52.ஆதலால் ஆத்மாவை பொதுவாகவோ அல்லது குறிப்பாகவோ சொல்ல முடியாததாக இருக்கிறது .ஆத்மா தன்னிலே ஆனந்தமாக இருக்கிறது.

53.இனி அறிவாக சொல்வதானால் ,இதற்கு மேல் சொல்லப்படும்யாவும் படிப்பதற்கு கடினமாகும்.(இது மௌனத்தில் போய் முடியும்).

54.ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு உண்மை ,ஆத்மனை நிரூபிக்க முடிந்தால் அது பொய்யாகி விடுகிறது ,ஆதலால் உவமைகள் அனைத்தும் சுட்டிக்காட்ட சக்தியற்று போகின்றன.

55.அவரைப் பற்றிய விளக்கங்களும்யாவும் பிரயோஜனம் படாமல் மறைந்து போகின்றது. வெட்டவெளிச்சம் ஆக வெளியே தெரிந்தாலும் அவை அனைத்தும் அர்த்தமற்றதாவும் முடிகின்றது.

56.எல்லா முயற்சிகளும் அவரை விளக்க முடியாமல் வீணாகிப் போனதை உணர்ந்து விளக்கங்கள் பின்வாங்கி விட்டன.

57.போர்வீரன் தன் தளபதிக்காக உயிரை விட்டு விடுவது அவன் காட்டும் நேர்மையாகவும். அதுபோல அவரை விளக்கும் முயற்சியை விட்டு விடுவதே அவருக்கு நாம் காட்டும் நேர்மையாகவும்.

58.அதனை புரிந்து கொள்ளும் முயற்சியானது, அந்த முயற்சியை நினைத்து வெட்கப்பட்டு தற்கொலை செய்து கொண்டது .அது தன்னிலே தானாக இருந்துகொண்டு அனுபவத்தையும் மறுக்கின்றது.

59. ஒரு பொருளின் தோலை ஒவ்வொன்றாக உரித்தால் அந்த பொருள் அழிந்துவிடும்.

60.வாழை மரத்தின் தண்டு வெப்பத்தினால் அதனுடைய ஒவ்வொரு பட்டையையும் உதிரும்போது மரம் நிற்காமல் போகிறது.

61.இதேபோல் அனுபவிப்பவன் அனுபவிக்கப்படும் பொருளும் காணாமல் போய்விடுகிறது. இவ்விரண்டும் இருப்பதில் என்ன பயன்?

62.மேல் கூறியபடி அனுபவிப்பவனே இல்லாமல் போகும்போது வார்த்தைகளினால் என்ன பயன்?

63.சப்தத்தின் அதிர்வு இல்லாத பரா(வுக்கு) வாக்கியமே அவசியம் இல்லாத போது ,உதடுகளினால் உச்சரிக்கும் வார்த்தைகளால் என்ன பயன்?

64.ஏற்கனவே விழிப்புணர்வுடன் இருப்பவனுக்கு விழிப்புணர்வை பற்றி பேச வேண்டிய அவசியம் இல்லை ,எப்படி என்றால் வயிறு முழுவதும் நிரம்பியவனுக்கு சமைக்க வேண்டிய அவசியம் இருக்காது.

65. சூரியன் உதித்த பிறகு விளக்குகள் ஓய்வு எடுக்கின்றன .நிலம் அறுவடைக்கு தயாரான பிறகு உழுவுவதற்கு என்ன அவசியம்.

66. பற்றும் விடுதலையும் இரண்டும் இல்லாத போது வார்த்தைகளின் அவசியம் இல்லை. இதை புரிந்து கொள்ளாதவர்களுக்கு பிரசங்கம் தேவைப்படுகிறது.

67.அதை (பிரம்மம்) மறதியின் காரணமாக இழந்துவிட்டால் ,வார்த்தைகளால் மட்டும் தான் நினைவுபடுத்தி மீட்க முடியும்.

68.வார்த்தைகள் நினைவு படுத்துவதற்காக மட்டுமே பயன்படுகிறது என்றாலும் வேறு எந்த பிரயோஜனமும் இல்லை.

## அத்தியாயம் 4 -வார்த்தையின் வீரியம் பொய்.

1.நினைவு படுத்துவதற்கு பயன்படும் கொண்டாடத்தக்க வார்த்தைகள் நமக்கு உதவி செய்கின்றன. மறைபொருளான பிரம்மத்தை காண்பதற்கு வார்த்தை கண்ணாடி போல் உதவுகிறது அல்லவா?

2.கண்ணாடி இருப்பதை காட்டும் என்பதில் ஆச்சரியம் இல்லை ஆனால் வார்த்தை என்னும் கண்ணாடி மறைந்து இருப்பதை காட்டும்.

3.சூரியன் உலகை பிரகாசிப்பது போல் வார்த்தைகள் நாம ரூபங்கள் அற்ற சிவசக்தியை பிரகாசிக்கின்றது. இந்த ஒரு தகுதியின் காரணமாக ஆகாயம் சப்தம் என்று அழைக்கப்படுகிறது.

4.வார்த்தை என்பது ஆகாய தாமரை போன்றது (இல்லாதது) ஆனாலும் உலகம் என்னும் பழத்தை தருகிறது .வார்த்தைகளால் அளக்க முடியாதது இவ்வுலகில் வேறு என்ன இருக்கிறது.

5.வார்த்தையானது கைவிளக்கு பாதை காட்டுவதுபோல் எதை செய்வது, எதை செய்யக்கூடாது என்று காட்டுகிறது .பற்று மற்றும் விடுதலை இடையே உள்ள பிரச்சனைகளுக்கு நடுவராக இருந்து செயல்படுகிறது.

6.வார்த்தைகள் அறியாமையின் பக்கம் சேர்ந்தால் இல்லாத உலகத்தை உண்மையாக இருப்பதாகவும் மற்றும் உண்மையாக இருப்பதை இருப்பதாக காட்டுவதற்கு மூன்று சோவிகள் விழுவது எத்தனை கடினமோ அதைவிட கடினமாகும்.

7. வார்த்தை என்னும் இந்த குழந்தை பேய் விரட்டுபவனாக மாறி அறியாமையை விரட்டி சுத்த சிவத்துடன் கலக்கச் செய்கிறது.

8.அகங்காரம் உடம்புடன் அடையாளப்படுத்திக் கொண்டால் உடலில் சிறைபடுகிறது, வார்த்தையின் உதவினால் அது தன்னை தான் உணர செய்கிறது.

9.சூரியன் உதயமாகும் பொழுது வெளிச்சம் வருகிறது அதே சமயம் அது இருட்டையும் அழித்துவிடுகிறது .ஆதனால் வார்த்தையை சூரியனுடன் ஒப்பிட முடியாது.

10.மனம் உள்முகப்படுவதற்கும், வெளிப்படுவதற்கும் இவ்விரண்டிற்கும் வார்த்தை உதவுகிறது.

11. பிரம்ம ஞானத்தை அடைய வார்த்தை உதவிய பின் வார்த்தை தன்னையே தியாகம் செய்து விடுகிறது.

12.பிரம்மத்தை நினைவு படுத்துவதற்காக வார்த்தை பிரபலமாக இருக்கிறது. ஆனால் பிரம்மத்திற்கும் ,வார்த்தைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

13.பிரம்மம் என்ற வார்த்தையை பிரம்மத்தை குறிக்காது ஆதலால் அது பிரம்மத்திற்கு பயன்படாது. பிரம்மம் தன்னைத்தானே புரிந்து (அறிந்து) கொள்கிறது, ஆதலால் அது அறிவதற்கு எதனுடைய உதவியும் தேவைப்படாது.

14.பிரம்மத்தை நீ மறந்தாலும் நினைவுபடுத்தினாலும் ஒரு பொருளாக பார்த்தாலும் பிரம்மத்தை தவிர இரண்டாவதாக வேறொன்றும் இல்லை.

15.உன்னையே நீ நினைவுபடுத்துவது மறப்பதும் சாத்தியமா? நாக்கு தன் சுவையை அறிகிறது என்றும் அறியவில்லை என்றும் சொல்ல முடியாது.

16.முழுவதும் விழித்த நிலையில் தூக்க உணர்வு இல்லை, நான் விழித்திருக்கிறேன் என்ற உணர்வும் இல்லை. இதுபோல்தான் பிரம்மத்தை நினைக்கவும் மறக்கவும் முடியாது.

17.சூரியன் இரவை அறியாது ஆதலால் அது பகலையும் அறியாது ,அதுபோல்தான் பிரம்மத்தை நினைக்கவும் மறக்கவும் முடியாது.

18.மறப்பதும் நினைவூட்டுவதும் அவசியமில்லாத இடத்தில் வார்த்தையாகிய நினைவூட்டுபவன் எதற்காக? ஆதலால் இங்கு வார்த்தைக்கு வேலையில்லை.

19.வார்த்தை ஒரு மிக முக்கியமான பங்கு வகிக்கிறது என்று நினைப்பதற்கு கூட எவனுக்கு தைரியம் இருக்கிறது?

20. வார்த்தை அறியாமையை அழிக்கிறது மற்றும் பிரம்மத்தை (ஆத்மாவை) காட்டுகிறது என்று சொல்பவன் மூடனே.

21.சூரியன் இருட்டை அழித்து விட்டு வெளிச்சத்தைத் தருகிறது ,இம்மாதிரியான முட்டாள்தனமான வார்த்தை உண்மையை உணர்த்த உதவாது, ஏனெனில் சூரியனுக்கு இருட்டு என்பதே கிடையாது.

22. விழிப்பில் இருப்பவன் தூக்கத்தை திட்ட முடியுமா? விழித்து கொண்டிருப்பவனை எழுப்ப முடியுமா?

23.அறியாமை என்று ஒன்று இல்லாத பிரம்மத்தில் அறியாமையை அழித்து விட்டு பிரம்மத்தை அடைவது என்பது முட்டாள்தனம் ஆகும்.

24.அறியாமை என்பது மலடியின் மகனை போன்றது ,அந்த மலடியின் மகனை வார்த்தை என்னும் வாளைக் கொண்டு எப்படி வெட்டுவது?

25.வானவில் உண்மையில் இருக்கிறதா? ஒரு வில்லாளி வான வில்லில் நாணை ஏற்ற முடியுமா?

26.அகத்தியரின் தாகத்தை கானல் நீரினால் தீர்க்க முடியுமென்றால் தர்க்கத்தால் அறியாமையை போக்க முடியும்.

27.கந்தர்வ நகரத்தை தீ வைத்து அழித்து விட முடியுமென்றால் வார்த்தைகளினால் அறியாமையை அழித்து விட முடியும்.

28வெளிச்சத்திற்கு முன்னால் இருட்டு நிற்க முடியாது. இந்நிலையில் இருட்டை அழிப்பதற்கு வெளிச்சத்தால் என்ன செய்ய முடியும்.(உதாரணம்: போலீஸ் -திருடன் -திருந்துவது).

29. ஒருவன் பகலை காண்பதற்கு விளக்கொளியை தேடுவது பிரயோஜனமற்ற வேலையே.

30.நிழல் விழாத போது அந்த இடத்தில் எதுவுமில்லை நிழல் விழுந்தப்பிறகும் அந்த இடத்தில் எதுவுமே இல்லை.

31.தூங்கி விழித்தவுடன் கனவை பொய்யென்று உணர்வது போல் அறியாமை என்பது அறியாமையிலும் இல்லை.

32.மாந்திரீகனால் உருவாக்கப்பட்ட நகைகள் வீடு முழுவதும் இருந்தது என்பதும் அவை அனைத்தும் கொள்ளையடிக்கப்பட்டு விட்டது என்பதும் உண்மையா? அல்லது நிர்வாணமாக செல்லும் ஒருவனிடம் கொள்ளையடிக்கப்பட்டது என்பது உண்மையா?

33.ஒருவன் கற்பனையில் லட்சக்கணக்கான இனிப்புகளை சாப்பிட்டாலும் அவன் முழு விரதத்தில் தான் இருப்பான்.

34. கானல்நீர் இல்லாத போதும் தரை காய்ந்து தான் இருந்தது அப்படி கானல்நீர் இருக்கும் பட்சத்தில் தரை ஈரமாகவா இருக்கும்?

35.சித்திரத்தில் தெரியும் மழை விளை நிலங்களிலும் குளங்களிலும் நிறப்பி விடும் என்றால் அறியாமை இப்போது தெரிவது போல் தெரியும்.

36. மையிருட்டை மையாக்கி கடிதம் எழுத முடியும் என்றால் (கருப்பு) மை தயாரிப்பது வீன் வேலை.

37.கண்கள் ஆகாயத்தில் நீலநிறம் காண்பது உண்மையா? இப்படியே அறியாமை இருக்கிறது என்று புரிந்து கொள்.

38.அவித்யை (மாயை) என்ற வார்த்தையிலேயே " நான் உண்மையில் இல்லை" என்று அறியாமையே சொல்கிறது.

39. இரண்டாவதாக அது விளக்க முடியாதவையாக இருப்பதால் அதூ இல்லையென்று நிரூபணமாகிறது.

40.அறியாமை இருக்கிறது என்றால் அதற்கு ஏதாவது ஒரு தடையம் இருக்க வேண்டும் .ஒரு பொருள் ஒரு இடத்தில் இருந்தது என்றால் அது இல்லாத போதும் ஏதேனும் ஒரு தடையம் இருந்தாக வேண்டும்.

41.அறியாமையை அழித்து விட்டுத்தான் ஆத்மா ஒளிர்கிறது என்பதை இல்லை. இது சூரியனைப்போல் இருட்டை அழிக்காமலேயே ஒளிர்வது போல் ஒளிர்கிறது.

42. அறியாமை என்பது ஒரு பிரமை (illusive) மேலும் பிரமை என்பதை மறைத்து விடுகிறது.ஆதலால் இருப்பது போன்று தோன்றுகிறது.

43.எந்த கண்ணோட்டத்தில் பார்த்தாலும் அறியாமை இல்லை என்பதே உறுதியாகிறது. இந்நிலையில் கையை உயர்த்திக் கொண்டு நான் அறியாமையை அழித்து விட்டேன் என்று வார்த்தைகளால் எப்படி கூற முடியும்.

44.ஒரு இரும்பு கம்பியால் நிழலை அடித்தால் தரையில்தான் அடிபடும் அல்லது ஆகாயத்தை அடித்தால் கைதான் பாதிக்கும்.

45. கானல் நீரை குடிப்பது,
ஆகாயத்தை அணைப்பது,
நிழலை முத்தமிடுவது.

46.நாம் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் அனைத்தும் வீணாகிவிடும் .அதேபோல் நாம் வார்த்தையைக் கொண்டு தர்க்கம் செய்து அறியாமையை அழிப்பது வீணாகிவிடும்.

47.அறியாமையை அழிக்க முயற்சிப்பது என்பது ஆகாயத்தின் தோலை உறிக்க முயற்சிப்பது போல் அர்த்தமற்றதாகிவிடும்.

48.ஆட்டின் கழுத்தில் இருக்கும் முளையில் பால் கரப்பது ,அல்லது கண்களுக்கு பதிலாக மூட்ட ுகளைக்கொண்டு வழி தேடுவது, மாலை நேரத்தில் வடகத்தை காயவைத்தல்.

49.சக்கையில்யிருந்து சாறு பிழிந்து அதை ஒன்றுமே இல்லாததோடு கலந்து அதை தலையில ா முண்டத்துக்கு ஊட்டுவது.

50.கால்வாய் தண்ணீர் பின்னோக்கி ஓடினால் ,நிழலை பிரட்டுவதும் ,காற்றை கயிறாக திரிப்பது.

51. குழந்தையை பயமுறுத்தும் பூச்சாண்டியை அழிப்பது (ஆ)பிம்பங்கள் அனைத்தையும் ஒரு பையில் கட்டுவது(ஆ) உள்ளங்கையில் இருக்கும் முடியை மழிப்பது.

52. இல்லாத பானையை உடைப்பது (ஆ)ஆகாயத்தில் உள்ள மலரை பறிப்பது(ஆ) முயல் கொம்பை முறிப்பது.

53.எரிந்த கற்பூரத்தின் கரையிலிருந்து மை எடுப்பது (ஆ)நவரத்தின விளக்கிலிருந்து கருப்பு கரையை எதிர்பார்ப்பது (ஆ)மலடியின் குழந்தைக்கு மகிழ்ச்சியாக திருமணம் செய்து வைப்பது.

54. அமாவாசையில் சாதகபட்சிக்கு உணவு கிடைப்பது(ஆ) கானல் நீரில் மீன் பிடிப்பது.

55.எவ்வளவுதான் இதைப் பற்றி விவரிப்பது?இல்லாததிலிருந்து வருகின்ற அறியாமையை வார்த்தைகளைக் கொண்டு இல்லாமல் செய்வது வீண் முயற்சியே.

56.இருட்டுக்கு உருவம் கொடுப்பதுபோல் இல்லாத அறியாமையை அழிப்பதற்கு வார்த்தையே ஆதாரமாகக் கொள்வதுபோல இருக்கிறது.

57.அறியாமை என்பது இல்லவே இல்லை. எப்படி பகலில் வெட்ட வெளியில் விளக்கு அவசியமில்லையோ அதே ாபோல் அறியாமையை அழிப்பதற்கு வார்த்தை தேவையில்லை.

58. விதைக்காத நிலத்தில் அறுவடை செய்ய சென்றால் அங்கே மிஞ்சுவது அவமானமே.

59. ஆகாயத்தை பிடிக்க முயற்சி செய்வது என்பது வீட்டில் சும்மா உட்கார ுவதற்கு சமமே.

60.கடலிலே ் பெய்யும் மழை உபயோகமற்றது போல் ,அறியாமையை அழிக்க வார்த்தை உபயோகப்படாது.

61. அளவுகோல் என்பது ஆகாயத்தைக் அளக்க முயற்சிக்காத வரை உபயோகமானதே, இருட்டை காட்டாத வரை விளக்கு உபயோகமானதே.

62. ஆகாயம் எனும் தின்பண்டத்தை நாவினால் சுவைத்தேன் என்பது மிதமிஞ்சிய வார்த்தையாகிறது.

63. விதவையை அலங்கரிப்பது என்பது வாழைத்தண்டின் உட்பகுதியை உண்பது போன்றது.

64.உருவுள்ள உருவமற்ற அனைத்தையும் சூரியன் ஒளிர செய்கிறதல்லவா? ஆனால் இரவுக்கு சூரியன் பிரயோஜனபடுமா?

65.கண்களால் அனைத்தையும் காண முடியும் என்றாலும் உறக்கத்தை காண முடியாது, ஏனென்றால் விழிப்பில் தூக்கம் இல்லை.

66. பகலில் நிலவை காண முயற்சிப்பது வீண் முயற்சியே.

67. சகோரபச்சி எழுதாத வெற்று காகிதத்தை வாசித்தால் மௌனமே மிஞ்சுவது மேலும் ஆகாயத்தில் நடக்க முயற்சித்தால் முடவனுக்கு சமம்.

68. அதேபோல் வார்த்தைகளால் அறியாமையை அழிக்க முடியும் என்பது அர்த்தமற்ற பேச்சு.

69.அமாவாசையில் நிலவினால் இருட்டை விலக்க முடியாதது போல் வார்த்தையினால் அறியாமையை அழிக்க முடியாது.

70.பொம்மை விளையாட்டில் உணவே இல்லாமல் உணவு உண்பது என்பது விரதத்திற்கு சமாணமே அதேபோல் குருடனின் கண் இமைகள் நன்றாக திறந்தாலும் குருடனே!.

71.இல்லாததற்கு அர்த்தம் கண்டுபிடிக்க வார்த்தை முயற்சித்தால் வார்த்தை எந்த பிரயோஜனம் இன்றி அழிந்துவிடும்.

72.இல்லாத அறியாமையை அது இல்லை என்று கூட ஏன் சொல்லவேண்டும் .வார்த்தை அதை நிரூப்பிக்க முயற்சித்தால் தோல்வி தான் மிஞ்சும்.

73.இல்லாத அறியாமையை அழிக்க வார்த்தை முயற்சித்தால் வார்த்தை அழிந்து விடும் அல்லது வார்த்தை தொடர்ந்துக்கொண்டே இருக்கும்.

74.அறியாமையின் அழிவிற்கு வார்த்தைகளை சான்றாகக் காட்ட முயற்சித்தால் அறியாமை என்பது இல்லாத காரணத்தினால் எதுவும் நடக்காது.

75. வார்த்தைகள் ஆத்மாவை காட்டிகொடுக்கும் என்பது முடியாத காரியமாகும்.

76.எந்த நாட்டிலாவது ஒருவன் தன்னையே திருமணம் செய்து கொள்ள முடியுமா? சூரிய கிரகணத்திற்கு சூரியனே காரணமாக முடியுமா?

77.ஆகாயம் ஆகாயத்திற்குள் செல்லுமா?கடல் கடலுக்குள் செல்லுமா? உள்ளங்கை உள்ளங்கையுக்குள் செல்லுமா?

78.சூரிய உதயத்திற்கு சூரியன் காரணமா?பழம் பழுப்பதற்கு பழம் காரணமா? வாசனையை வாசனை உணருமா?

79.உயிர் உள்ள ,உயிர்யற்ற அனைத்தும் தண்ணீரை குடிக்கும். தண்ணீரை தண்ணீர் குடிக்குமா?

80. 360 நாளில் எந்த நாளில்லாவது சூரியன் தன்னை தான் பார்த்ததுண்டா?

81. அழிக்கும் கடவுளான நெருப்பிற்கு கோபம் வந்தால் மூவுலகத்தையும் எரிக்கும். ஆனால் தன்னையே எரிக்குமா?

82.உலகத்தை படைத்த பிரம்மனே ஆனாலும் தன் முன்னால் தானே நிற்பதற்கு கண்ணாடி உதவி இல்லாமல் முடியாது.

83.பார்வை தன்னையே பார்க்குமா ,சுவை தன்னையே சுவைக்குமா, விழித்திருப்பவனை விழிக்க வைக்க முடியுமா! இது ஒருபோதும் நடக்காது.

84.சந்தனக்கட்டை தன்மேல் சந்தனத்தை பூசி கொள்ளுமா? வர்ணம் தன்னையே வர்ணம் பூசிக்கொள்ளுமா? முத்து தன்னையே அலங்கரித்து கொள்ளுமா?

85. தங்கம் தன்னையே உரசிக்கொள்ளுமா? விளக்கு தன்னையே ஏற்றுக்கொள்ளுமா? திரவம் திரவத்திற்குள் மூழ்குமா?

86. சிவன் தன் தலையில் நிலவு வைத்துக்கொள்வது போல் ,நிலவு தன் தலையில் நிலவை வைத்துக்கொள்ள முடியுமா?

87. இதேபோல் ஆத்மன் ஞானமாய் ஒளிரும் போது ,ஞானம் ஞானத்தை கொடுக்குமா?

88.எவன் தன்னை முழுமையாக அறிந்து இருக்கிறானோ அவன் உண்மையில் தன்னை அறிந்தது இல்லை, எப்படி கண்கள் தன்னையே காண முடியாதோ அப்படி.

89.எப்போது கண்ணாடி தன்னையே பார்த்துக் கொள்ள முடிகிறதோ, அப்போது ஆத்மா தன்னை அறிந்து கொள்ளும்.

90.கத்தியானது எல்லா திசைகளிலும் ஊடுருவ முடியும் ஆனால் தனக்குள் ஊடுருவ முடியுமா?

91.நாக்கிற்கு அனைத்து சுவைகளையும் அறியும் வல்லமை இருந்தாலும், நாக்கு நாக்கின் சுவையை அறிய முடியுமா?

92.இருந்தாலும் நாக்கு அனைத்து சுவைகளையும் அறியும் திறனை இழந்து விட்டதா? இல்லை அது எப்போதும் போல் தொடர்ந்து அறிந்துக்கொண்டுதான் இருக்கிறது.

93.தன்னிலே தான் சத் சித் ஆனந்தமாக இருக்கிறது என்று எந்த வார்த்தைகளை கொண்டு அதை உணர்த்த முடியும் ஏனெனில் எல்லாமே அதுவாக இருக்கிறது.

94.ஆத்மனை எந்த ஆதாரத்தை கொண்டும் இருக்கிறது என்றோ அல்லது இல்லை என்றோ நிரூபிக்க முடியாது .தன்னிலேயே அது நிறைந்து இருப்பதால் இது கொடுப்பதும் இல்லை வாங்குவதும் இல்லை.

95. ஆதலால் வார்த்தை ஆத்மனை சம்பாதித்து கொடுக்கும் என்பது ஆத்மனுக்கு பொருந்தாது.

96.பகலில் ஏற்றிய விளக்கு இருட்டை போக்குவதும்மில்லை ,வெளிச்சத்தை. தருவதுமில்லை .இப்படித்தான் வார்த்தை அறியாமையை அழிப்பதுமில்லை ஞானத்தை தருவதுமில்லை.

97.இல்லாத அறியாமையை அழிக்க முடியாது ஆத்மன் நிருபனமாகவே இருப்பதால் அது நிரூபிக்க முடியாது.

98.ஆத்மனுக்கும் சரி அறியாமைக்கும் சரி வார்த்தை எந்த உபயோகமும் இல்லாமல் வெள்ளத்தில் அடித்து செல்வது போல் செல்கிறது.

99. ஆத்மாவில் வார்த்தையோ அல்லது வார்த்தைக்கு அர்த்தமோ இல்லை ,இதுவே வார்த்தை அர்த்தமற்றது என்பதற்கு ஆதாரமாக இருக்கிறது.

100.இல்லாத பூச்சாண்டி வருவது பற்றி பேசுவதும் .ஆகாயத்தை கையில் பிடிப்பதை நினைப்பதும்.

101.எவ்வளவு அர்த்தமற்றதோ அப்படியே வார்த்தை அர்த்தமற்றது. அது பல வர்ணங்கள் பூசப்பட்ட பொருளைப் போன்று அழகாக இருந்தபோதிலும்.

102.அறிவும், அறியாமையும் வார்த்தை மூலமாக வாழ்கின்றது என்பது சித்திரத்தில் தெரியும் வனம் போல்.

103. மேகம் கலைந்து சூரியன் ஒளிர்வது போல் வார்த்தை கரைந்து விடுகிறது.

## அத்தியாயம் :7 அறியாமை இல்லை

1. ஞானத்தில் அறியாமை என்பதை காதால் கூட கேட்க முடியாது.

2. இருட்டில் மின்மினிப்பூச்சி வெளிச்சம் போலியாக இருப்பது போல் அறியாமை போலியாக இருக்கின்றது.

3.கனவில் இருக்கும் வரை கனவு மெய் ,இருள் இருக்கும் வரை இருட்டு மெய், அறியாமையில் இருக்கும் வரை அறியாமை மெய்.

4.மண்குதிரை போருக்கு உதவாது ,மாந்திரீக ால் உருவாக்கப்பட்ட நகைகள் அணிவதற்கு உதவாது.

5. சுத்த அறிவில் அறியாமைக்கு இடமே இல்லை .நில ஒளியில் கானல்நீர் தெரியுமா?

6.பொதுவான அறிவு என்பது அறியாமையின் மற்றொரு வடிவம் .ஒன்றை மறைத்து ஒன்று வெளிப்படுகிறது .இது யாராலும் வேறுபடுத்தி பார்க்க முடியாது.

7.அறியாமைக்கு இதுவரை முன்னுரை கொடுத்தது போதும், முதலில் நாம் அறியாமையை தேடுவோம் ,அதன் உண்மைத் தன்மையை அறிந்த பின் அறிவும் பொய் என்பது மட்டுமே புலப்படும்.

8.ஆத்மாவின் ஒரு அங்கமாக அறியாமை வசித்திருந்தால் பின் ஏன் ஆத்மாவில் அறியாமையின் ஒரு சுவடு கூட தெரியவில்லை.

9.எங்கே அறியாமை இருக்கிறதோ அங்கே எல்லாமே அறியாமையாக மாறிவிடுகிறது .இதுவே அறியாமையின் இயற்கை தன்மையாகும்.

10.சில வேதங்கள் ஆத்மாவில் அறியாமை இருப்பதாக சொல்கின்றது. இந்த அறியாமையே தன்னை உணர்வதற்கு உதவுகின்றது.( பட்டால்தான் புரிகின்றது).

11.ஆத்மன் உலகமாய் உருவாவதற்கு முன்னால் அறியாமை என்னும் விதை இருந்திருந்தால் அதை யார் அறிவார்?

12.அறியாமை அறியா தன்மையில் இருப்பதால் அது தன்னை அறியாது.பின் அறியாமை இருப்பதை எப்படி உறுதிப்படுத்தும்.

13.அறியாமை தன்னை தானே அறிந்து கொள்ளும் என்று உறுதிப்படுத்தினால், அனைத்துமே உண்மைக்கு எதிராக சென்று மௌனத்தில் முடியும்.

14.ஆத்மாவை தவிர அறிவதற்கு வேரேதுவும் இல்லை. இந்த ஆத்மனையே அறியாமை மறத்து முட்டாளாக்கி விடும் என்றால் அந்த அறியாமையை யார் அறிவார்?

15.அறியாமையினால் ஆத்மாவையும் அறியாமையையும் அறிந்து கொள்ள முடியாது. ஆதலால் ஒருவன் அறியாமையை உணர்வதற்கு வெட்கப்பட வேண்டும்.

16.மேகம் சூரியனை விழுங்கினால் எந்த வெளிச்சத்தை கொண்டு மேகத்தை பார்ப்பாய்? அல்லது உறக்கம் உறங்குபவனை ஆட்கொண்டால் யார் உறக்கத்தை அனுபவிக்கிறார்கள்.

17.அறியாமை இருக்கிறதே என்று சொல்வதே மிகப் பெரிய அறியாமை ஆதலால் அறியாமை அறியாமைக்கு தெரியாமலேயே காணாமல் போய்விடும்.

18.ஆத்மாவின் துணையின்றி அறியாமை இருக்கிறது என்று அறிந்து கொள்ள முடியாது. ஆதலால் அறியாமைக்கு இடமே இல்லை.

19.கண்ணில் பொறை மூடியிருக்கிறது ஆனால் நான் குருடன் அல்ல என்பது அர்த்தம் இல்லாத பேச்சாக இருக்கிறது.

20.காட்டு தீயில் எண்ணெய்யை ஊற்றி விட்டு எண்ணெய் மட்டும் எரியவில்லை என்றால் அந்த தீயுக்கு சக்தி இல்லை என்று அர்த்தம்.

21.இருளை வேண்டாம் என்று சொல்லிக் கொண்டே கதவை மூடிக் கொள்வது அறியாமையை வேண்டாம் வேண்டாம் என்று சொல்வது.

22. ஒருவன் படுத்துக்கொண்டு இருக்கும்போது விழிப்பு நிலையை விடாமல் இருந்தால் அதை தூக்கம் என்று எப்படிக் கூறலாம் .இரவின் தடயம் இல்லாத வெளிச்சத்தை இரவு என்று எப்படி கூறலாம்.

23.அதுபோல ஆத்மா தன் நிலையில் எதையும் இழக்காமல் இருக்கும்போது அறியாமை என்பது பொய் ஆகிறது.

24. அறியாமை ஆத்மாவில் வாசம் செய்வது என்பது தர்க்கத்தின் படி அது பொய்.

25.அறியாமை என்பது அடர்ந்த இருள். ஆத்மா என்பது ஒளிவீசும் பிரகாசம் .இவ்விரண்டும் கை கோர்ப்பது எவ்வகையில் சாத்தியம்.

26விழிப்பும் - கனவும் ,மறதியும் - ஞாபகமும், இவ்விரண்டும் எதிர் மறைகளும் ஒரே பாதையில் கைகோர்த்து செல்ல முடியுமா?

27. குளிரும் - வெப்பமும், இருட்டும் - சூரிய வெளிச்சமும், இவ்விரண்டும் ஒரே பாதையில் செல்ல முடியுமா?

28. இரவும் பகலும் ஒன்றாக ஒரு இடத்தில் இருக்க முடிந்தால் அறியாமை ஆத்மாவில் இருக்கும்.

29. வாழ்வும் ,சாவும் ஜோடியாக இருக்க முடிந்தால் ஆத்மாவும் அறியாமையும் ஜோடியாக வாழும்.

30. ஆத்மா அறியாமையை அழித்துவிட்டு ஆத்மாவில் இருக்கிறது என்பது நம்பத்தகாதது.

31. இருள் ஒளியோடு போட்டிபோட்டு இருள் தன்மையை இழக்க ஆரம்பித்தால் இயற்கையாகவும் கண்டிப்பாகவும் சூரியனாக மாறிவிடும்.

32.மரக்கட்டை தன் கட்டை தன்மையை இழந்தால் நெருப்பாக மாறிவிடும் பின் எரிபொருளாக இல்லாமல் நெருப்பாக மாறிவிடும்.

33.வெவ்வேறு நீர் நிலைகள் கங்கையில் கலக்கும் போது தன் தனிப்பட்ட நிலையை இழந்து கங்கையாகவே மாறுகிறது.

34.அப்படியே! அறியாமை ஆத்மனை சந்தித்தால் தன் அறியா தன்மையை இழந்து ஆத்மனாகவே மாறிவிடும் .அறியாமையின் தனிப்பட்ட இருப்பையும் நிரூபிக்க முடியாது.

35.ஆத்மாவின் எதிரியான அறியாமை ஆத்மனை தொட்ட மாத்திரத்தில் அறியாமை அழிந்துவிடுகிறது . அறியாமையின் தனி இருப்பை நிரூபிக்க முடியாது.

36.உப்பினால் வடிவமைக்கப்பட்ட மீனுக்கு உயிரை கொடுத்தால் அது தண்ணீரிலும் வாழாது , தண்ணீர் இல்லாமலும் வாழாது.

37. அறியாமை இல்லாத இடத்தில் மட்டுமே ஆத்மா இருக்கிறது.அறியாமைப்பற்றிய பேச்சுக்களை கேட்க வேண்டிய அவசியமில்லை.

38. கயிறை பாம்பு என்று உணர்ந்தபின் அதை வைத்து கட்டவோ, அவிழ்க்கவோ முடியாது. அதனை விரட்டவோ முடியாது .அதுபோல் ஆத்மாவால் அறியாமையை அழிக்க முடியாது.

39. பகலிற்க்கு பயந்து இருளானது இரவை நோக்கி முழு நிலவன்று சென்றது, அங்கேயும் நிலவால் இருள் விழுங்கப்பட்டது.

40.எல்லா வழிகளிலும் அறியாமை என்ற வார்த்தை பயனற்றது ஆகிறது. எந்த காரணங்களாலும் அறியாமையை ஏற்றுக்கொள்ள முடியாது.

41. இப்போது ஓர் ஆராய்ச்சியைப் மேற்கொள்வோம் அறியாமை நிஜ சொரூபம் என்ன என்பதை செயல் , செயல் வினைகளாளோ அல்லது நேரடியாகவோ தெரிந்துகொள்ள முடியுமா?

42.புலன்களாலும் ஆதாரங்களாலும் உணர்த்தப்படும் அறியாமை என்பது அறியாமையின் வெளிப்பாடுகளே தவிர அது அறியாமையல்ல.

43. விதையிலிருந்து முளைத்த செடியானது அழகாக இருக்கிறது ஆனால் செடியில் விதை இல்லை.

44.கனவில் தோன்றும் நல்ல மற்றும் கெட்ட விஷயங்கள் தூக்கம் அல்ல ஆனால் தூக்கத்தின் வெளிபாடு.

45. ஒரே சந்திரன் இரண்டாக தெரிவது கண் கோளாறின் வெளிப்பாடே தவிர கண் கோளாறு அல்ல.

46.அப்படியே! அறிபவன் ,அறிவு ,அறியப்படும் பொருள் ஆகிய மூன்றும் அறியாமையின் வெளிப்பாடே தவிர அறியாமை அல்ல.

47. ஆதாரமும், சாட்சியமும் அறியாமையின் வெளிப்பாடே தவிர அறியாமை அல்ல.

48. அறியாமைக்கு இருப்பு இருக்கிறது என்று ஒப்புக்கொண்டால் அதுவே அறியாமை.

49.கனவில் தோன்றும் அனைத்தும் கனவே. கனவை காண்பவன் கனவை விட்டு வேறுப்பட்டவனா? ஆகவே அறியாமையின் வெளிப்பாடே அறியாமையாகிறது.

50. வெல்லம் தன்னை ருசிக்குமா? அல்லது விளங்கு கரி தன்மேலேயே கரியைப் பூசிக் கொள்ளுமா? கழுகுமரம் தன்னையே கழுகுயேற்றுமா?

51.காரியம் காரணத்திலிருந்து வேறுபாடு இல்லாமல் இருக்கிறது. அறியாமையின் காரியம் அறியாமையே, பின் எது எதை சமாளிப்பது?

52.ஆகையால் அறிபவனும் ,அறியப்படும் பொருளும் அறியாமையே ஏனென்றால் அனைத்து ஆதாரங்களும் கானல் நீரில் இருக்கும் மீனை போன்றது.

53.ஆதாரங்கள் மூலம் மதிப்பிட முடியாததும் மற்றும் ஆகாயத்தில் மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன என்ற இவ்விரண்டுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை.

54.அறியாமைக்கு ஆதாரங்கள் இல்லாமல் இருப்பதாலும், விவரிக்க முடியாததாக இருப்பதாலும் இந்த ஆராய்ச்சியிலிருந்து அறியாமை இல்லை என்று உணரப் படுகிறது.

55.ஆதாரமும் அனுமானமும் அறியாமையை நிரூபிக்க முடியாமல் இருப்பதால் அறியாமை என்பது இல்லை.

56.எந்த பலனையும் கொடுக்க முடியாததாகவும் காரண காரியம் அற்றதாகவும் இருக்கும் இதை அறியாமை என்று சொல்வதற்கே வெட்கப்படவேண்டும் ,பின் இதை உண்மை என்று எவர் ஒப்புக்கொள்வார்?

57. அறியாமை உண்மையில் ஆத்மனை கனவு காண வைக்கவோ, தூங்க வைக்கவோ முடியாது.

58.இது ஒருபுறம் இருக்கட்டும் சிலர் சொல்வார்கள் ஆத்மன் என்னாதான் சுத்தமாக இருந்த போதிலும் அதனிடம் அறியாமை இருக்கிறது என்று.

59.எப்படி கட்டையில் நெருப்பு மறைந்து இருக்கிறதோ அப்படி ஆத்மாவில் அறியாமை மறைந்து இருக்கிறது என்பர்.

60.ஆத்மா தன்னை ஆத்மா என்று கூறிக் கொள்ள முடியாமல் இருக்கும் போது அறியாமை எப்படி ஆத்மாவில் இருக்கும்.

61.விளக்கை ஏற்றுவதற்கு முன்பே புகையை விரட்ட முடியுமா? இல்லாத மரத்தின் நிழலைப் போக்க முடியுமா?

62.பிறக்காத மனிதனுக்கு வாசனை திரவியம் பூச முடியுமா? இல்லாத கண்ணாடியை துடைக்க முடியுமா?

63. மடியிலிருந்து கரக்காத பாலை கடைவது அறிவாளித்தனம் ஆகுமா?

64. ஆத்மா தன்னையே அறியாமல் இருக்கும் போது பின் அறியாமை மட்டும் அதனிடம் எப்படி இருக்கும்.

65.அதனால் அறியாமை இல்லை என்று நிரூபணமாகிறது ,பின் இல்லாத அறியாமை பற்றி வீண் பேச்சு எதற்கு.

66.இருக்கிறது என்றும், இல்லை என்றும் கூற முடியாத ஆத்மனிடம் அறியாமை இருக்கிறது என்று சொல்பவர்களுக்கு நான் சொல்லப் போவது.

67.இது எப்படி இருக்கிறது என்றால் ,இல்லாத பானை நூறு துண்டுகளாக ஒடைந்தது போல் அல்லது மரணத்துக்கே மரணம் வந்ததுபோல்.

68. தூக்கம் தூங்கி போனது ,மூர்ச்சையே மூர்ச்சை ஆனது , இருள் இருட்டுக்குள் போனது.

69. இல்லாத ஒன்று நசிந்ததாக உணர்ந்தது .வாழை மரத்தின் மையம் உடைந்தது (உதாரணம்; வெங்காயம்) ஆகாயத்தில் ஊரல் விழுவது.

70.செத்தவனுக்கு விஷத்தை ஊட்டுவது, ஊமையனுக்கு வாய் பூட்டு போடுவது, எழுதாத வார்த்தையை அழிப்பது.

71.அப்படியே ஆத்மாவில் அறியாமை இருக்கிறது என்பதும் அது ஆத்மாவோடு கலந்து விட்டது என்று சொல்வது பொய்.

72.மலடி எப்படி குழந்தையை பெற்று எடுக்க முடியுமா? வறுபட்ட விதை எப்படி முளைக்கும்? யாராவது சூரியனை இருட்டில் பார்க்க முடியுமா?

73. அதுபோல் பரிசுத்த உணர்வே அறியாமையை தேடினாள் அதன் சுவடாவது கிடைக்குமா?

74.வெண்ணைய் எடுப்பதற்காக பால் சட்டியை கடைந்தால் வெண்ணை பிரியுமா? அல்லது நன்றாக கலந்து கொள்ளுமா? ஆத்மாவில் அறியாமையை ஆராய்ச்சி செய்தால் இப்படி தான் நடக்கும்.

75.தூக்கத்தை பிடிக்க நினைத்து விரைவாக விழித்துக்கொண்டால் தூக்கத்தை பிடிக்க முடியுமா?

76.அப்படியே அறியாமையை தேடுவது முட்டாள்தனமில்லையா? இல்லாத அறியாமையை தேடினால் எப்படி கிடைக்கும்.

77.எப்படி பார்த்தாலும் அறியாமையின் இருப்பு புரிதல் என்னும் நகரத்தில் காணக் கிடைக்காது

78.அறியாமைக்கு இருப்பு இருந்தால் அது ஆத்மாவிலோ அல்லது ஆத்மாவை விட்டு தனித்தோ புரிதல் என்னும் கண்களுக்கு புலப்பட்டு இருக்கும்.

79. அறியாமையால் வைராக்கியத்தின் முகத்தை அழுக்காக்க முடியாது, கனவில் கூட ஆதாரம் இதற்கு கிடையாது. அறியாமையின் இந்த வினோத தன்மையால் அது தானாகவே அழிந்து விடுகிறது.

80.இவ்வளவு சொல்லிய பிறகும், என் இனிய நண்பனே அறியாமைக்கு செல்லும் பாதையை கண்டுபிடிக்க ஏதாவது உபகாரணத்தை பார்த்திருக்கிறாயா.

81.இது எப்படி இருக்கிறது என்றால் அம்மாவாசை அன்று சந்திரனிடம் ஒளியால், முயல் கொம்பை தூனாக வைத்து கட்டப்பட்ட மண்டபத்திற்கு ஒளி கொடுப்பது போல் உள்ளது.

82.அல்லது அகாயத்தால் ஆன பூக்களை வைத்து மலடியின் குழந்தைகளை அலங்காரம் செய்து விழா கொண்டாடுவது போல் உள்ளது.

83. அல்லது ஆகாயக் குழியை,ஆமை நெய்யால் நிரப்ப முடிந்தால் அறியாமை இருப்பது உண்மையாகும்.

84.இதுவரை நாம் முடிந்தவரை முயற்சித்தது அறியாமையை கொண்டு வருவதற்காகத்தான் ஆனால் அறியாமையோ இல்லை இப்படியே எவ்வளவு காலம்தான் பாடிக்கொண்டு இருப்பது.

85.ஆதலால் அறியாமை என்னும் வார்த்தையை நான் கனவில்கூட உணர முடியாது இருந்தாலும் மற்றொரு யோசனை என் மனதில் வருகிறது.

## 86-94 அறியாமையை ஆதரித்து விளக்குகிறார்.

86.தன்னை மட்டும் காணாமல் பொருளையும் பார்ப்பதால் காண்பவன் காணப்படும் பொருள் என்று இரண்டு வந்துவிட்டது ஆனால் ஆத்மாவில் இது இல்லை.

87.ஆத்மா தன் முன்னால் காணக்கூடிய பொருள்களின் உலகமாக விரிந்து இருந்துகொண்டு அது ஒரு பார்வையாளனாக இருக்கிறது.

88.இந்த மிகப்பெரிய உலகத்தை பார்த்துக் கொண்டிருக்கும்போது ஆத்மன் மட்டுமே இருக்கிறான் என்று சொல்வது சங்கமாய் இருக்கிறது.

89.ஆதலால் அறியாமை கண்களுக்கு தெரியாமல் இருந்தாலும் அது இருக்கிறது இதில் சந்தேகமே வேண்டாம் கண்களால் காண்பதே இதற்கு ஆதாரமாய் இருக்கிறது.

90.ஒன்றாய் இருக்கும் சந்திரன் இரண்டாக தெரிந்தால் கண்களில் கோளாறு இருக்கிறது என்று அறிகிறோம்.

91.மரமானது பூமியிலிருந்து தண்ணீரை உறிந்து பசுமையாகவும், செழிப்பாகவும் இருக்கிறது.

92.அதேசமயம் மரம் அதன் வேரில் இருந்து தான் தண்ணீரை உறிஞ்சுகிறது என்பது உண்மை ,அறியாமையும் அதே மாதிரிதான் அது இருக்கிறது என்பதை காணும் உலகத்தை வைத்து தெரிந்து கொள்கிறோம்.

93.விழித்தவுடன் தூக்கம் மறைகிறது, தூங்கியவன் தூக்கத்தை அறிவதில்லை ஆனால் தூக்கம் கனவை தருவதால் அறியாமை இருக்கிறது என்று நிரூபணமாகிறது.

94.பரிசுத்தமான ஆத்மாவில் பொருட்களால் ஆன பரந்த உலகம் கண்களுக்கு தெரிவதால் சந்தோஷம◌ாக அறியாமை இருக்கும் என்று கூறலாம்

## 86-94 விளக்கம் அளிக்கிறார்.

95. இப்படிப்பட்ட அறிவை எப்படி அறியாமை என்று சொல்வீர்கள்? ஒளியையும் பிரகாசத்தையும் கொடுப்பதை எப்படி நீ இருட்டு என்று கூறுவாய்.

96. நிலவை விட பிரகாசமாக இருந்து கொண்டிருக்கும் ஒன்றை கருப்புமை என்று எப்படி கூறலாம்.

97.நெருப்பின் செயல்பாட்டை நீரால் செய்ய முடிந்தால் உலக இயக்கத்தில் அறியாமை காரணமாக இருக்கிறது என ஒப்புக்கொள்ளலாம்.

98.அம்மாவாசையில் பௌர்ணமியை விட சிறப்பாக ஒளியை கொண்டு வர முடிந்தால் அப்போது இந்த அறிவனை அறியாமை எனக் கூறலாம்.

99.விஷ மடியில் இருந்து இனிப்பாக அமுதம் ஆறாக வந்தால் ,அதை விஷம் என்று கூறமுடியாது.

100.இதற்கு முன்னால் சொல்லப்பட்ட அனைத்தும் அறிவாய் ஒளிர்ந்து கொண்டிருக்கும் போது அதை அறியாமையின் வெள்ளம் என எப்படி கூறலாம்?

101.இதுவரை சொல்லப்பட்டதையே அறியாமை என்று கூறினால் பின் அறிவு என்று வேறு எதைத்தான் கூறுவது ஏனெனில் எல்லாம் ஆத்மாவே.

102.ஆத்மாவுக்கு எதுவும் நேராது நேர்ந்தாலும் அது அதை உணராது. ஆதாரமும் , உறுதிமொழியும் பயனற்றதாகிறது.

103.ஆத்மாவின் இறுப்பு நிரூபிக்க முடியாததாக இருப்பதால் ஆத்ம இன்மையும் நிரூபிக்க முடியாது.
விளக்கம் :ஆத்மாவை விட்டு தனித்து எதுவும் இல்லாததால் அதை எந்த ஆதாரத்தை வைத்தும் நிரூபிக்க முடியாது, மேலும் ஆத்மா இல்லை என்று கூட நிரூபிக்க முடியாது. ஆத்மா இல்லை என்று நிரூபிக்க முடியாததால் அதை இல்லை என்று ஏற்றுக்கொண்டு அறியாமை இருக்கிறது என நினைத்துக் கொள்ளலாம்.

104. சுதந்திரமாய் இருப்பது அதனின் இருப்பு எதையும் சாராமல் தனித்து இருப்பது. அது யாராலும் பார்க்க முடியாததாய் தன்னை தானே பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆதலால் அதன் இருப்பை யார் இல்லை என்று மறுக்க முடியும்.

105.தன்னை சூனியம் என்று கூறி இல்லை என்று நிரூபிப்பதை அமைதியாக பொறுத்துக் கொள்கிறது ,மேலும் அது தன் மேல் குணங்களை ஏற்றினால் அதற்கு முதுகை காட்டுகிறது.

106.ஆழ்ந்த உறக்கத்திலும் தன் இருப்பை அறிந்த அனைத்தையும் உணர்ந்த ஒன்று உலகத்தின் இருப்பை உணராதா? ஆனால் தான் அனைத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்ற உணர்வு இல்லாததாக இருக்கும்.

107. வேதங்களின் எல்லாம் கூறப்பட்டுள்ளது ஆனால் ஆத்மனை பற்றி இப்படி அப்படி என எதுவுமே கூறவில்லை காரணம் ஆத்மன் குணங்கள் அன்று இருப்பதால்.

108.சூரியன் அனைத்தையும் ஒலிர்விக்கிறது ஆனால் ஆத்மாவை ஒலிர்விக்குமா? ஆகாயம் எல்லாவற்றிலும் வியாபிக்கிறது ஆனால் ஆத்மாவில் வியாபிக்கிறதா?

109. எலும்புகளால் ஆன இந்த உடம்பை நான் உடல் என்னும் அகங்காரம் உடலுக்கு துணை புரிந்தாலும் அது ஆத்மாவை மறுக்கின்றது.

110.அறிவால் நீ எதையும் அறிந்தாலும் ஆத்மாவை அறிய முடியாது மனதால் நீ எதை நினைத்தாலும் நீ ஆத்மாவை நினைக்க முடியாது.

111.புலன்கள் தொடர்ந்து தன் வாயால் புலனுகர்பொருள்கள் என்னும் கரடுமுரடான தரையை எவ்வளவுதான் உரசினாலும் அது ஆத்ம சுகத்தை அடையாது.

112. எவன் ஒருவன் முழுமையாக ஆத்மாவை உள்ளடிக்கியவனாக இருப்பானோ அவன் உலகிலுள்ள எல்லாவற்றையும் விழுங்கிவிட்டு இருப்பின்மை உட்பட விழுங்கிவிட்டு திருப்தியாக இருக்கிறான்.

113. ஆத்மா தனக்கே அறியப்படும் பொருளாக இல்லாததாக இருக்கும் போது மற்றவருக்கு அது அறியப்படும் பொருளாக இருக்க முடியுமா? எல்லா சுவைகளையும் அறியும் நாக்கு அதன் சுவையை அறியுமா?

114.அறியாமையானது கணக்கற்ற நாம ரூபங்களை எடுத்துக்கொண்டு ஆத்மாவிற்கு முன்னால் வந்தால் அது காணாமல் போய்விடும்.

115.ஆத்மா தன்னையே தான் பார்த்துக்கொள்ள பசியில்லாமல் இருக்கும்போது அடுத்தவர்கள் தன்னை பார்க்க விரும்புவதில்லை.

116. சூதாட்டத்தில் ஒருவன் தோலால் ஆன வளையத்துக்குள் குச்சியை மிகச்சரியாக நுளைத்ததாக நினைத்து ஆனால் பின் கடைசியில் வளையத்தின் வெளியே வைத்ததை உணர்ந்து ஏமார்ந்து விடுவது போல் அறியாமை இருக்கிறது என்று முயற்சிப்பவன் ஏமார்ந்து போவான்.

117.ஒருவன் தன் அறிவால் தன் நிழலை அளக்க முயற்சித்து தாவினால் அந்நிழல் சிறறிப்போய்விடுகிறது.

118.அதுபோல ஒருவன் ஆத்மா இப்படி அப்படி இருக்கும் என்று கடும் முயற்சி செய்து தீர்மானித்தால் அது அவன் கைக்கு அகப்படாமல் மறைந்து விடுகிறது.

119.இதற்கு மேல் என்ன சொல்ல! வார்த்தையின் செயல்பாடுகள் ஆத்மாவை விவரிக்க முடியாது.

120. குருட்டுத் தன்மையும் கண்ணில்லா தன்மையும் ஆத்மாவினால் குணப்படுத்தப்படுகிறது பிறகு அறியாமை ஆத்மாவிடம் கரைந்து விடுகிறது.

121.காணப்படும் பொருளாக அது இருக்க முடியாது காண்பவனாகவும் அது இருக்க முடியாது.

122.எல்லாம் தனக்குள் ஒன்றாய் அடங்கி இருக்கும்போது யார் யாரைப் பார்ப்பது. பார்வையாளன், பார்க்கப்படும் பொருள் என்பதே இருக்காது.

123.இருந்தாலும் இந்த தடையை மீறி ஆச்சரியமாக தெய்வீக ஒளி கதவுகளைத் திறந்து கொண்டு பார்க்கப்படும் பொருள், பார்வை ,பார்வையாளன் என்ற மூன்றுமாகவும் அதுவே ஒளிர்கிறது.

124. உலகில் எண்ணற்ற நாம ரூபங்கள் தோன்றினாலும் இவை அனைத்திற்கும் அடிப்படை ஆத்மா ஒன்றே.

125.எண்ணற்ற நாம ரூபங்கள் தோன்றியவுடன் உணர்வானது மயக்கம் கொண்டு கண்ணாடியில் தன்னை பார்க்க மறுக்கிறது காரணம் அதற்கு சலிப்பு ஏற்பட்டு விட்டது.

126.தன்னுடைய தயாள குணத்தின் காரணமாக காட்சிகளில் புதிதுபுதிதாக எண்ணற்ற உடைகளை ஒவ்வொரு நொடியும் உடுத்திக் கொண்டு இருக்கிறது.

127.ஆத்மா பழைய அழுக்கடைந்த ஆடைகளை கலைத்து விட்டு புதிய புதிய ஆடைகளை அணிந்து கொண்டு வருகிறது.

128.அவ்வாறே ஒவ்வொரு நொடியும் புதிய புதிய ஆபரணங்களை அணிந்து கொண்டு அதையும் உணர்ந்து கொண்டிருக்கிறது.

129.தனிமையில் இருப்பதில் திருப்தி இல்லாமல் **அகில உலகமாக** பலபல ரூபங்களாக பரந்து விரிந்து உள்ளேன்.

130.ஒரே உணர்வு தான் ஒவ்வொரு நாம்ரூபமாக வடிவமெடுக்கிறது .இவை அனைத்தும் அறிகின்ற அறிவு அந்த உணர்வை விட்டு வேறுபட்டதல்ல.

131.அதேபோல் அறிவு (பார்க்கிறவன்) மற்றும் அறியாமை (பார்க்கப்படும் பொருள்) **சுத்த** ஆத்மாவில் கலந்தே இருக்கிறது.

132.நானே பார்வையாளனாக இருந்து கொண்டு அனைத்து அழகான பொருட்களையும் கண்டு மகிழ்ந்து கொண்டிருக்கிறேன், மேலும் அந்த ஆழகான பொருள்கள் அனைத்தும் நானே என்று நினைத்து நிறைவடைந்தேன்.

133. எல்லாம் கொடுத்தல் வாங்குதல் என்ற செயல்பாடுகள் அனைத்தும் ஒன்றில் தான் நடக்கிறது எப்படி கண்ணாடியில் பார்க்கும் போது ஒரே முகமே இரண்டாக தெரிந்தாலும் உண்மையில் இருப்பது ஒன்றே.

134. ஒரு நல்ல குதிரை நின்று கொண்டே தூங்கும். குதிரை விழிப்பிலும் நின்று கொண்டே தான் இருக்கும். **அதே போல** கொடுக்கல் வாங்கல் விஷயத்தில் ஆத்மா ஒரே நிலையில் மாறாமல் இருக்கும்.

135.எப்படி தண்ணீர் தானே அலைகளாக மாறி விளையாடிக் கொண்டு இருக்கிறதோ அதுபோல ஆத்மா தானே எல்லா வடிவங்களாக மாறி விளையாடிக் கொண்டிருக்கிறது.

136.சுடர் மாலைகளை கொண்டு நெருப்பு தன்னை அலங்கரித்துக் கொண்டிருக்கிறது .இப்படி சொல்லிவிட்டால் நெருப்பும் சுடரும் வேறுவேறு ஆகிவிடுமா?

137.கதிர் குடும்பத்தால் சூரியன் சூழப்பட்டுள்ளது. ஆதலால் சூரியன் கதிர்களை விட்டு வேறாகுமா?

138. சந்திரனின் ஒளி சந்திரனின் மேல் பட்டுக் கொண்டிருக்கிறது அந்த ஒளியினால் சந்திரனின் புனிதத் தன்மைக்கு பாதிப்பு ஏற்படுமா?

139. தாமரை பூவானது ஆயிரம் இதழ்களைக் கொண்டிருந்தாலும் அது ஒரே தாமரை தான்.

140.சகஸார்ஜீன் என்ற ஆயிரம் கைகளை உடைய அரசன் இருந்தாலும் அவனை ஒருவன் என்றே அழைக்கிறோம்.

141. தறியில் எண்ணற்ற வண்ணங்களுடன் நூற்கண்டுகள் இருந்தாலும் அவையனைத்தும் நூலே.

142.பேச்சின் உறைவிடமாக கோடிக்கணக்கான வார்த்தைகள் ஒருங்கிணைந்து இருந்தாலும் பேச்சு ஒன்றே.

143.எண்ணற்ற காணப்படும் பொருட்கள் இருக்கலாம், எண்ணற்ற பார்வைகளும் இருக்கலாம் .காணப்படும் பொருள்களும், பார்வைகளும் பார்வையாளனை விட்டு வேறல்ல.

144. வெல்லம் மொத்தையை துண்டு துண்டாக்கினாலும் அது வெல்லமே.

145.அதேபோல் ஆத்மா காட்சிகளை பார்ப்பவனாக இருந்தாலும் அல்லது காணப்படும் பொருளாக அதுவே விரிந்து இருந்தாலும் அது இரட்டை என்ற வித்தியாசம் இல்லாமல் ஒன்றாகவே இருக்கிறது.

146.இவ்வுலகம் முழுவதுமாக எண்ணற்ற நாம ரூபங்களாக ஆத்மாவே ஆக்கிரமித்து இருந்தாலும் இரட்டை என்ற வார்த்தைக்கு இடமில்லாமல் ஒன்றுபட்டு இருக்கிறது.

147. பட்டு நூல்கள் பல வண்ணங்களில் இருக்கலாம் ஆனால் அனைத்தும் நூலே.

148. கண்களை மூடிக்கொண்டு இவ்வுலகனைத்தையும் காண முடிந்தால்.

149. விதை முளைவிடாமலேயே மரமாக முடியும் என்றால் அதை இதனுடன் ஒப்பிடலாம்.

150.ஒருவன் அமைதியாக இருக்க ஆசைப்பட்டு தன்னையே ஒன்றுமில்லாதவனாக பார்த்தால் அவன் தன் உடலையே அமைதியின் ஆசனம்ாக்கி விடுகிறான். (மேலும் இதற்கு ஞானதேவர் சில உதாரணங்களை தருகிறார்).

151. கண் இமைகளை மூடினால் பார்வை அமைதியாகிறது.

152. அல்லது சந்திரன் வருவதற்கு முன்னால் கடல் நிறைந்து இருக்கிறது (அமைதி) அல்லது ஆமை தன் அவயங்களை உள்ளிழுத்துக் கொள்வது போல.

153. சந்திரன் அமாவாசையன்று 17 ஆவது நாளுக்குள் செல்வதுபோல.

154. இப்படியே பார்வையாளன் பார்க்கப்படும் பொருள் அத்தனையையும் வென்று தான் வென்றவன் என்ற உணர்வு வருவதற்குள் அமைதியாக இருக்கின்றான்.

155.இவையெல்லாம் இயற்கையாகவே நடக்கிறது, பின் யார் யாரைப் பார்ப்பது, பார்க்காமல் இருப்பதே அதனுடைய இயற்கையான உறக்கம்.

156. எதையும் பார்க்காமல் இருக்கும் நிலையை விட்டுவிட்டு தானே இவ்வுலகமாய் உருமாற நினைத்து காணப்படும் பொருள்களாக மாறி உலகத் தோற்றத்திற்கு காரணமாகிறது.

157.ஆத்மா காண்பவனாகவும் காணப்படும் பொருளாகவும் எப்போதும் இருந்துகொண்டிருக்கிறது .புதிதாக யார் எதை உருவாக்க முடியும்.

158.ஆகாயமும் வெற்றிடமும், தென்றலும் தொடு உணர்வும் ,சூரியனும் வெளிச்சமும் இவற்றிற்கு உறவு தேவையா?

159.அவன் உலகமாக விரியும்போது அதை தன் முன்னால் காண்கிறான். அவன் உலகமாக இல்லாதபோது இல்லாததை காண்கிறான்.

## (காண்போனுக்கு ஆதரவாக கீழ் வருபவை)

160.உலகமாய் இருக்கும்போதும் உலகமாய் இல்லாமல் கரைந்து விட்ட பிறகும் அந்த நிலையையும் அவன் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

161.எப்படி கற்பூரத்திற்கு யாரும் வெள்ளையடிக்காமலேயே அது சந்திரனை போன்று இயற்கையாகவே வெள்ளை நிறமாக இருக்கிறது, அப்படியே ஆத்மாவில் காண்போன் இயற்கையாகவே இருக்கிறான்.

162. இதற்கு மேல் என்ன (சுருக்கமாக) ஆத்மா எந்நிலையில் இருக்கும்போதும் ,அது தன்னையே பார்த்துக் கொண்டிருக்கிறது (மேலே கூறிய இந்த மூன்று ஸ்லோகமும் பார்க்கிறது என்ற இடத்தில் அறிகிறது என்று எடுத்துக் கொள்ள வேண்டும்).

## ஆத்மாவின் தன்மை:

163.கற்பனையில் பல உலகங்களை அவன் விருப்பப்படி உருவாக்கி அதில் ஆனந்தமாக அலைந்து திரிகிறான்.

164.கண்களை மூடி கருவிழிகளை அழுத்தினால் ஒளியலைகள் தெரியும் இது அந்த கண்ணில் உருவாக்கமே.

165.பரிசுத்த உணர்வானது தன்னையே பார்த்துக் கொண்டிருக்கிறது என்பதை தவறாக சொல்வதற்கு எந்த காரணமுமில்லை.

166.முத்துக்கு பளபளப்பை யார் கொடுத்தது? தங்கத்துக்கு தங்க தன்மையை யார் கொடுத்தது?

167. சந்தனம் தன் மேல் வாசனை திரவியத்தை பூசிக் கொள்ளுமா? (அ) அமிர்தத்துக்கே அமிர்தம் தேவைப்படுமா? (அ) வெல்லம் தன் இனிப்பை சுவைக்குமா?

168.(அல்லது) கற்பூரத்திற்கு வெள்ளை நிறம் அடிக்க வேண்டுமா? (அ) நெருப்புக்கு சூட்டை ஏற்ற வேண்டுமா?

169.(அல்லது) படரும் கொடியானது தானாகவே மரத்தைச் சுற்றிக் கொண்டு தனக்கு வீடு கட்டிக் கொள்ளுமா?

170. அதுபோல ஒரு சுத்த உணர்வே உலகமாக ஒளிர்கின்றது.

171.இப்படியே எப்போதும் தன்னையே பார்த்துக்கொண்டு இருக்கிறான் ஆனால் தன்னை பார்க்கிறேன் என்ற உணர்வு அற்றவனாக.

172.ஆத்மா தன்னையே பார்ப்பது அல்லது பார்க்காமல் இருப்பதூ, இரவில் சந்திரன் இது இருள் என்றும் இது ஒளி என்றும் அறியாது இருப்பது போல.

173.எனவே அவன் உலகமாக விரிய வேண்டாம் என்று நினைத்தால் அது உடனே நடந்து விடுகிறது ஏனெனில் அது எப்போதும் தன் நிறைவில் இருக்கிறது.

174.காண்போனுக்கும் காணப்படும் பொருளுக்கும் நூலிழை வித்தியாசம் இருப்பது போல் தெரிகிறது ஆனால் இந்த வித்தியாசம் கூட இவ்விரண்டும் இணையும்போது (பிராயலகாலம்) இல்லாமல் போகிறது.

175.பார்வையாளனுக்கு காட்சி கலந்தாலும் அல்லது காட்சிக்குள் பார்வையாளன் கலந்தாலும் அடிப்படையில் இருப்பது ஒரே உணர்வு.

176.எங்கும் எப்பொழுதும் காண்போனும் காணப்படும் பொருளும் ஒன்றாக இணைந்து கலந்து கரைந்துவிடுகிறது.

177.நெருப்பு கற்பூரத்தில் கலந்தாலும் கற்பூரம் நெருப்பில் கலந்தாலும் ஒன்றாக இணைந்து கலந்து கரைந்துவிடுகிறது.

178.ஒன்றையும் ஒன்றையும் கழித்தால் மிஞ்சுவது பூஜ்ஜியம் என்று அழைக்கப்படுவது, ஒன்று இல்லாததே காண்போன் காணப்படும் பொருள் இணையும்போது இவ்வாறு நடக்கிறது.

179. ஒருவன் தன் பிரதிபிம்பத்தை கட்டி அணைத்தால் பிரதிபிம்பமும் , கட்டி அணைத்தல் என்ற செயலும் மறைந்து விடுகிறது.

180.காண்போனுக்கு பார்வை இல்லாமல் போனால் காண்போன் காணப்படும் பொருள் இரண்டும் ஒன்றாகிவிடும்.

181. கிழக்கு கடலும் மேற்கு கடலும் சந்திக்காத வரை அவை கடல்கள் என்று அழைக்கப்படுகிறது ஆனால் அவை சந்தித்தால் அது தண்ணீர் மட்டுமே.

182. ஒவ்வொரு கணமும் பல வகையான திரிபொடிகள் காண்போன், காணப்படும் பொருள், காட்சி தொடர்ச்சியாக உருவாகிக்கொண்டே இருக்கிறது .இவற்றை ஒரு பொருட்டாக மதிக்க வேண்டாமா?

183.ஆத்மன் இரண்டு நிலைகளை விழுங்கிவிட்டு (காண்போன், காணப்படும் பொருள்) தன் இயல்பான தன்மையை வெளிப்படுத்துவது என்பது ஆத்மன் கண்களை மூடுவதற்கும் திறப்பதற்கும் ஒப்பாகும்.

184.கண்கள் மூடினால் உலகம் விரிவடைகிறது கண்கள் திறந்தால் உலகம் மறைகிறது என்ன ஆச்சரியம்!

185.எப்போது காண்போன் காணப்படும் பொருள் சந்தித்து சமநிலையை ஏற்படுத்திகிறானோ அப்போது தனக்குள் யோகநிலையை அடைகிறான்.

186. தண்ணீரில் ஒரு அலை அழிந்து இன்னொரு அலை உருவாவதற்கு இடைப்பட்ட நிலைதான் அந்த நிலை (யோகநிலை).
உதாரணம்: நாம் காற்றை உள்ளிழுத்து வெளிவிடுவது முன் இருக்கும் நிலை அல்லது காற்றை வெளியே விட்டு உள் இழுப்பதற்கு முன் இருக்கும் நிலை அல்லது கும்பக நிலை.

187. அல்லது உறக்கம் முடிந்து விழிப்பு முழுவதுமாக ஏற்படாத நிலை.

188.ஒரு பொருளின் மேல் வைத்த பார்வையை எடுத்து விட்டு இன்னொரு பொருளின் மேல் பார்வையைவைக்கும் முன்னர் ஏற்படும் அந்த அனுபவ நிலையே யோக நிலை.

189.பகல் முடிவு பெறாமலும் இரவு தொடங்கப்படாமல் இருக்கும் அந்த அழகான ஆகாய நிலையே யோக நிலை.

190.மூச்சை உள் இழுத்து பின் அதை வெளியிடுவதற்கு முன் இருக்கும் இடைப்பட்ட நிலை.

191.ஐந்து புலன்களும் ஒரே நேரத்தில் புலன் நுகர் பொருட்களை அனுபவித்தால் ஏற்படும் நிலை.

192.இந்த நிலைதான் ஆத்மாவின் உயர்ந்த நிலை இந்த நிலையில் பார்ப்பது பார்க்காமல் இருப்பதற்கு என்பதற்கோ இடமில்லை.

193. ஒரு கண்ணாடி தன் பிரதிபிம்பத்தை (இன்னொரு கண்ணாடியில்) பார்க்கிறதோ என்றோ அல்லது பார்க்கவில்லை என்றோ கூறமுடியாது.

194.கண்ணாடியில் தன் முன்னால் இருக்கும் முகமும் பின்னால் பிரதிபலிக்கும் முகமும் தெரியும் . கண்ணாடி இல்லாதபோதும் முகம் இருந்த இடத்திலேயே இருக்கிறது. குறிப்பு: (கண்ணாடிக்கு தன் முன்னால் இருக்கும் முகமும் பின்னால் (கண்ணாடிக்குள் பிரதிபிலிக்கும்) முகமும் தெரியும்.

195.சூரியன் எல்லா திசைகளையும் பார்க்கிறது ஆனால் தன் உதயத்தையும் அஸ்தமனத்தையும் பார்த்து ரசிக்க முடியுமா?

196.சாறு (ஜூஸ்) தன்னையே குடித்துக் கொள்ளுமா அல்லது தன் முகத்தை தானே மறைத்துக்கொள்ளுமா? எனவேனில் அது திரவ நிலையில் இருக்கிறது.

197. அவ்வாறே சுயமாக ஒளிர்ந்து கொண்டிருக்கும் ஆத்மன் தான் பார்ப்பதும் இல்லை ,பார்க்காமல் இருப்பதும் இல்லை உண்மையில் இவ்விரண்டும் சேர்ந்தே இருக்கிறது.

198.ஆத்மன் தன்னையே பார்த்துக்கொண்டு இருப்பதால் பார்த்துக்கொண்டிருக்கும் தன்னை அது பார்க்க முடியாது ஆதலால் இயற்கையாக தன்னை பார்க்க முடியாததாக இருக்கிறது.

199.அவன் பார்த்துக்கொண்டே இருப்பதால் அவனால் பார்க்க முடியாது என எப்படி கூற முடியும் ஆதலால் இயற்கையாக தன்னை பார்க்க கூடியதாக இருக்கிறது.

200.பார்ப்பது ,பார்க்காமல் இருப்பது இரண்டும் கலந்து சமமாக ஆனந்தமாக இருக்கிறது ஆனால் இரண்டும் கலந்து தங்களேயே அழித்துக்கொள்கிறது.

201.அவன் தன்னையே பார்த்துக்கொண்டு இருப்பதால் பார்க்காமல் இருப்பதூ என்று அவனை கூறமுடியாது ஆதலால் ஆத்மாவில் இவ்விரண்டிற்க்கும் இடமில்லை.

202.பார்ப்பது, பார்க்காமல் இருப்பது இவ்விரண்டும் ஆத்மாவின் மறைந்து இருக்கிறது பார்க்கிறது என்றால் யார் எதைப் பார்க்கிறார்கள்.

203.காண்போன் உலக பொருள்களை காண்கிறான் ஆனால் அவன் உலகப் பொருளை பார்க்கிறான் என்று சொல்ல முடியாது அவன் பார்ப்பது என்பது பொருள்களின் இருப்பை அல்ல (ஆத்மா).

204.காண்போன் உலக பொருட்களை பார்ப்பதால் அவனை காண்பவன் என்று சொல்ல வேண்டியது இருக்கிறது. உலகப் பொருள்கள் ஒன்று இல்லாத போது அவனை காண்போன் என்று எவ்வாறு கூற முடியும்.

205.கண்ணாடியில் முகத்தைப் பார்த்தாலும் முகம் இருந்த இடத்திலேயே தான் இருக்கிறது ஆதலால் உன் அனுபவம் வீணாகிறது.

206.நுணுக்கமாக பார்த்தால் ஆத்மன் பார்ப்பது என்பது ஒருவன் தூங்கும்போது (கனவு) தன்னையே பார்ப்பதற்கு சமம்.

207.ஒருவன் வசதியாக மெத்தையில் தூங்கி கொண்டிருக்கும்போது கனவில் மற்றவர் அவனை தூக்கி கொண்டு போனால் இது உண்மை நிலைதானா?

208.அல்லது (கனவில்) ஒருவன் தலையில்லாமல் ஆதரவுயற்ற ஜோடி அதிகாரத்துடன் ஆரசாட்சி நடத்துவதாக பார்த்தான் .இது உண்மையா?

209.ஒருவன் தூங்குவதற்கு முன்னால் எந்த இடத்தில் எந்நிலையில் இருந்தானோ அதே நிலையில் தான் கனவு காணும்போது இருக்கிறான் .இதில் எந்த வித்தியாசமும் இல்லை.

210.தாகத்தில் இருக்கும் ஒருவன் கானல் நீர் கிடைக்கவில்லை என்று வருந்துகிறான். ஒருவேளை கானல்நீர் கிடைத்தால் அதனால் என்ன லாபம்.

211. ஒருவன் தன் நிழலையே துணையாக கொண்டால் அதனால் என்ன நன்மையும் ஏற்படாது.

212. காண்போன் தன்னையே காணப்படும் பொருளாக மாறி தனக்கே காட்டுவதால் பார்ப்பது என்பது பிரயோஜனம் இல்லாமல் போகிறது.

213.காண்போன் தன்னையே காணப்படும் பொருளாக இருப்பதால் அந்த பொருளை பார்ப்பதால் என்ன நன்மை? பார்க்கவில்லை என்றாலும் கூட அந்த பொருளாக இருப்பது தான் தானே?

214. முகத்தை கண்ணாடியில் பார்க்காமல் போவதால் முகம் பயனற்று போகிறதா. கண்ணாடியே இல்லாமல் போனால் கூட முகம் அப்படியே இருக்கிறது.

215.அப்படியே மாயை (அறியாமை) ஆத்மனை காட்டாது. மாயையே இல்லை என்றாலும் கூட ஆத்மாவுக்கு எந்தக் குறையும் ஏற்படாது.

216.ஆத்மா அற்புதமாக காண்பவனாக இருக்கிறான். காண்பவன் , காணப்படும் பொருள் இவ்விரண்டையும் சாராதவனாக இருக்கிறான். அவன் தன்னில் முழுமையாக இருக்கிறான். தானே பார்வையாக இருக்கிறான். இந்நிலையில் அவன் ஏன் காணப்படும் பொருளாக இருக்க வேண்டும்?

217.இதற்கு முன்பே சொன்னது போல் ,ஆத்மா பார்வையாளனாக இருப்பதால் காண்போன் காணப்படும் பொருள் பயனற்றதாக இருக்கிறது.

218.கயிற்றில் பாம்பு என்ற பொய்யான தோற்றம் தோன்றுகிறது ஆனால் உண்மையில் கயிறு மட்டுமே .அதுபோல பல தோற்றங்களில் காணப்படும் காட்சிகள் மட்டுமே.

219.முகத்திற்கு முன்னால் கண்ணாடி வைக்கப்படுகிறது கண்ணாடியில் முகம் தெரிகிறது. உண்மையில் முகம் இருந்த இடத்தில்தான் இருக்கிறது. கண்ணாடியில் இல்லை.

220. அதுபோல இவ்விரண்டில் (காண்போன், காணப்படும் பொருள்) காண்போன் மட்டுமே உண்மை. காணப்படும் பொருள் உண்மை இல்லாதவை.